விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 30 செவ்வாய்க்கிழமை (12.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 176

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மீள்குடியேற அனுமதிக்குமாறு கோரி திருமுறிகண்டி மக்கள் வழக்குத் தாக்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்ட காலமாக மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இழுபறியில் இருந்து வருகின்ற திருமுறிகண்டி கிராமத்தில் உள்ள தமக்குச் சொந்தமான காணிகளில் தாங்கள் மீள்குடியேறுவதற்கு அனுமதிக்க வேண்டும், இராணுவத்தின் பொறுப்பில் உள்ள அந்தக் காணிகள் தங்களிடம் கையளிக்கப்பட வேண்டும் எனக்கோரி அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிலர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார்கள். (20ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச பொலிஸாருடன் இணைந்த தரவுத்தளம் அங்குரார்ப்பணம்!

(கொழும்பு)

சர்வதேச பொலிஸாருடன் தொடர்புகளை கொண்ட தரவுத்தளம் ஒன்றை நேற்று இலங்கையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்துள்ளார்.

இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் சர்வதேச பொலிஸ் செயலகம் ஆகியவற்றின் தரவு தளங்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளன.

இதில் சர்வதேச ரீதியாக 3 கோடியே 20 இலட்சம் பேர் தொடர்பான தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இலங்கைக்கான கனேடிய தூதுவர் புரூஸ் லீவி, கருத்துத்தெரிவிக்கையில், இந்த திட்டத்தின் மூலம் சர்வதேச நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த தரவுகளை பரிமாற முடியும் என தெரிவித்தார்.

இதேவேளை சர்வதேச ரீதியாக காணாமல் போனதாக கருதப்படும் சுமார் 3 கோடி 20 இலட்சம் (20ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிவாய்க்காலில் சல்லடை போட்டு தேடுதல் செய்யும் இராணுவத்தினர்

### பொதுமக்கள் மத்தியில் பீதி

(வவுனியா)

முள்ளிவாய்க்கால் பகுதியை சல்லடை போட்டு அங்குலம் அங்குலமாக இராணுவத்தினர் தேடிவருகின்றனர் என அப்பகுதியிலிருந்து கிடைத்த தகவல் தெரிவித்தன.

யுத்தம் முடிந்து 3 ஆண்டுகள் ஆகிய பிற்பாடும், ஆனந்தபுரம், சாலை, வலைஞர்மடம், புதுமாத்தளன், இரட்டைமுள்ளிவாய்க்கால் மற்றும்முள்ளிவாய்க்கால்ஆகியபகுதியைஇராணுவத்தினர் தொடர்ந்தும் கடும் தேடுதலுக்கு உள்ளாக்கி வருகின்றனர்.

இங்கே காணப்படும் மனித எலும்புகளை உருக்கி உக்கவைக்க சில திரவங்களை சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்துள்ளனர் இலங்கை இராணுவத்தினர். இதனைத் தவிர விடுதலைப்புலிகள் புதைத்து வைத்த இராணுவத் தளபாடங்கள், ஆயுதங்கள் மற்றும் படகுகளையும் இலங்கை இராணுவம் கண்டு பிடிக்க முனைப்பு காட்டி வருகின்றது.

இவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐஸ்கிறீம் உண்ட 50 பேர் மயக்கம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு பிரதேசத்தில் இடம்பெற்ற பிறந்தநாள் மற்றும் திருமண வைபவத்தில் ஐஸ்கிறீம் உட்கொண்ட 50 இற்கும் மேற்பட்டோர் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 7 மணிக்கு பின்னதாக வாந்தி மற்றும் மயக்கமுற்ற நிலையிலும் இவர்கள் வைத்திய (20ஆம் பக்கம் பார்க்க)

## வேம்படி மகளிர் கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் அதிபராக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனத்தை பொதுச் சேவை ஆணைக்குழு வழங்கியுள்ளது. மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி வரும் இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவைத் தரத்தை உடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## தேரரின் வேண்டுகோளையடுத்து மூதூரில் பௌத்த நிலையம்!

### பாதுகாப்பு அமைச்சினால் அமைப்பு

(மூதூர்)

திருகோணமலை, மூதூர் பகுதியில் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் பச்சநூர் மலையில் பாதுகாப்பு அமைச்சினால் பௌத்த நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

சேருவெல சரணகித்தி நாயக்க தேரரின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த பௌத்த நிலையத்தை அமைப்பதற்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தத் தகவலை மாத்தறையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் பாதுகாப்புச் செயலாளரே வெளியிட்டுள்ளார். தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடமான பச்சநூர் பிரதேசத்திலுள்ள மூன்றாம் கட்டைமலையிலேயே இந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞன் 10 நாட்களுக்குப்பின் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி வடமராட்சிக் கிழக்கு முள்ளியான் பகுதியில் இடம்பெற்ற அச்சம்பவத்தில் காயமடைந்தவரே உயிரிழந்தவராவார்.

பன்றிக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் கொள்கையை மீள வலியுறுத்தினார் சிஸன்

### அமெரிக்கத் தூதரகம் விளக்கம்



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக நியமனம் பெறவுள்ள மிச்சேல் ஜே.சிஸன் அண்மையில் அமெரிக்க காங்கிரஸ் முன்னிலையில் இலங்கை பற்றி விளக்கமளித்தமை தொடர்பில்கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் நேற்று திங்கட்கிழமை தெளிவுப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தூதுவராக பிரேரிக்கப்பட்டுள்ள மிச்சேல் ஜே.சிஸன் அவரது நியமனத்தை உறுதி செய்வதன் ஒரு பகுதியாக கடந்த யூன் 6ஆம் திகதி செனட்டின் வெளியுறவுக் குழு முன்னிலையில் (20ஆம் பக்கம் பார்க்க)

# நித்தியானந்தாவை கைது செய்ய கர்நாடக அரசு உத்தரவு

## பிடதி ஆச்சிரமும் சீல் வைப்பு



கர்நாடக மாநிலம் பெங்களூர் அருகில் அமைந்துள்ள பிடதியில் உள்ள நித்தியானந்தாவின் ஆச்சிரமத்துக்கு கர்நாடக அரசு சீல் வைத்துள்ளது. மேலும் தலைமறைவாக உள்ள நித்தியானந்தாவை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு கர்நாடக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தின் திருவண்ணாமலையைச் சேர்ந்தவரான நித்தியானந்தா கர்நாடக மாநிலம் பெங்களூர் அருகே பிடதியில் ஆச்சிரமம் அமைத்துள்ளார். இவரது செயற்பாடுகள் பற்றியும் ஆசிரம நடவடிக்கைகள் குறித்தும் பல்வேறு சர்ச்சைகள் நாள்தோறும் வெளியாகி வருகின்றன.

அண்மையில் மதுரை ஆதினத்தின் இளைய சன்னிதானமாக நித்தியானந்தா நியமிக்கப்பட்டதற்கும் கடும் எதிர்ப்பு உருவானது. இது தொடர்பாக வழக்குகள் தொடரப்பட் டன.

இந்நிலையில் கர்நாடகத்தில் தொலைக் காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த நித்தியானந்தாவின் முன்னாள் சீடர் ஆர்த்திராவ், நித்தியானந்தா மீது பாலியல் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்தப் புகாருக்கு விளக்கம் கொடுப்பதற்காக நித்தியானந்தா சில நாட்களுக்கு முன்பு பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினார். அதன்போது செய்தியாளர்களுடன் நித்தியானந்தாவும் அவரது சீடர்களும் கைகலப்பில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து நித்தியானந்தாவை பிடதியில் இருந்து வெளியேறக் கோரி கன்னட அமைப்பினர் போராட்டமும் நடத்தினர்.

இப்படி தொடர்ந்து சர்ச்சைகளில் சிக்கி அசம்பாவிதங்களை உருவாக்கி வரும் நித்தியானந்தாவின் பிடதி ஆச்சிரமத்தை அரசு கையகப்படுத்தும் என்றும் கர்நாடக அரசு தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் பிடதி ஆச்சிரமத்துக்கு கர்நாடகஅரசு அதிகாரிகள் நேற்று சீல் வைத்தனர். மேலும் தலைமறைவாக உள்ள நித்தியானந்தாவை கைது செய்யவும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நித்தியானந்தா ஆசிரமம் சீல் வைக்கப்பட்டுள்ள நிலையில் ஆச்சிரமத்துக்கு சொந்தமான வங்கிக் கணக்குகளை முடக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அவரது பிணையை ரத்துச் செய்யவும் கர்நாடக அரசு நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகக் கூறப்படுகிறது. (எ-11)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற நால்வருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற நால்வருக்கு ஒரு இலட்சத்து 95 ஆயிரத்து 326 ரூபாய் அபராதம் விதித்து யாழ். நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதில் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள வீட்டிற்கு சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றவருக்கு நீதிமன்றத்திற்கு 10 ஆயிரம் ரூபாயும், 45 ஆயிரத்து 918 ரூபாய் மின்சார சபைக்கு நட்டஈடாக வழங்க வேண்டும் எனவும்,

கோண்டாவில் தெற்கில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவருக்கு 10 ஆயிரம் ரூபாய் நீதிமன்றத்திற்கும் 22 ஆயிரத்து 788 ரூபா மின்சார சபைக்கும் நட்ட ஈடாகவும் செலுத்த வேண்டும் எனவும்,

கோப்பாய் தெற்கை சேர்ந்தவருக்கு 10 ஆயிரம் ரூபாய் நீதிமன்ற அபராதமாகவும் மின்சார சபைக்கு 5 ஆயிரத்து 500 ரூபாயும் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை ஊர்காவற்துறை வீதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவருக்கு 10 ஆயிரம் ரூபாய் நீதிமன் றத்திற்கான அபராதத் தொகையும் மின்சார சபைக்கான நட்டஈடாக 51 ஆயிரத்து 954 ரூபாயை அபராதமாக செலுத்த வேண்டும் என நீதவான் நீதிமன்ற நீதிவான் மா.கணேச ராஜா தெரிவித்தபோது, குற்றம் சாட்டப்பட்ட நபர் தன்மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொள்ள மறுத்ததனால் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் விடுவித்ததோடு எதிர் வரும் 7 ஆம் மாதம் 5ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார். (எ-6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை

செல்வி சூ. மரிய அஞ்சலா

அவர்களின் அன்புத் தந்தை

### இராயப்பு சூசைப்பிள்ளை

அவர்கள் மரணமடைந்த செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/ உயரப்புலம் மெ.மி.த.க.பா.
ஆனைக்கோட்டை.

(C-246)

# யாழில் 3 மாதங்களில் மட்டும் விபத்துக்களால் 914 பேர் காயம்

யாழ். மாவட்டத்தில் கடந்த முதலாம் காலாண்டில் மட்டும் வீதி விபத்துக்களால் 8பேர் உயிரிழந் ததுடன் 914 பேர் காயமடைந்துள்ளனர் என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களிலேயே குறித்த விபத்துச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அறிக்கையின் பிரகாரம் யாழ். போதனா வைத்தியசாலையில் இந்த 3 மாதங்களில் 740 பேர் விபத்துக்களில் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதோடு சிகிச்சை பலனளிக்காத நிலையில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 31 பேர் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டதோடு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 29 பேர் அனுமதிக்கப்பட்டதோடு அங்கும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடந்த மூன்று மாதங்களில் 914 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதோடு 8பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-6)

# பாதுகாப்பு நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டது

## அமைச்சர் குரே தெரிவிப்பு

தமிழ்நாட்டில் அண்மையில் தான் எதிர் கொண்ட நிலைமை தொடர்பாக தமிழக அரசாங்கத்திடம் ஆட்சேபம் தெரிவிக்க வேண்டியதில்லை என அமைச்சர் ரெஜினோல்ட் குரே கூறியுள்ளார்.

தனக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிடப்பட்டதாக செய்தி வெளியானதிலிருந்து தமிழக அரசு தனக்கு போதிய பாதுகாப்பு வழங்கியதாகவும் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகவும் அவர் கூறினார்.

தான் எப்போதும் மீண்டும் தமிழ்நாட்டிற்கு செல்ல முடியும் எனவும் தன்னை தமிழ்நாட்டிலிருந்து 'வெளியேறுமாறோ அல்லது மீண்டும் அங்கு வரவேண்டாம் என்றோ யாரும் கூறவில்லை என செய்தியாளர்களிடம் அமைச்சர் குரே தெரிவித்தார்.

திட்டமிடப்பட்ட ஆர்ப்பாட்டம் குறித்து தமிழக பொலிஸார் தனக்கு தகவல் அளித்ததுடன் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாகவும் உறுதியளித்ததாகவும் அவர் கூறினார். எனினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தான் இலங்கைக்கு திரும்பியதாக அவர் கூறினார். (எ-11)

# தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

துணுக்காய் கல்வி வலய தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வின் ஸ்ரார் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் வன்னி தொண்டர் ஆசிரியர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் துணுக்காய் தொண்டர் ஆசிரியர் சங்கம் நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-9)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




சிவகார்த்திகேயன், ஆத்மியா மற்றும் பலர் நடிப்பில்

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி பகுதியில் இரண்டு பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
0776181216

(8614)


## மரண அறிவித்தல்

# க.மு. விக்கினேஸ்வரன்



காரைநகர் களபூமி பாலாவோடையினைப் பிறப்பிடமாகவும், தற்போது கொழும்பு இல. 34, விவேகானந்தா வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்றவர்களான எம்பெருமாள் கந்தப்பர் முத்தையாப்பிள்ளை கனகம்மா தம்பதிகளின் புதல்வனும், டுசிற்றா தனியார் நிறுவனத்தினதும், எவரிஜ் ஹொல்டிங் த்னியார் நிறுவனத்தினதும் முகாமைத்துவ பங்காளருமான விக்கினேஸ்வரன் 10.06.2012 ஆம் திகதி கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் சிவதாரணியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற க.மு. தர்மராஜா (தர்மராஜா நிறுவனம், கிளிநொச்சி, பரந்தன்), மற்றும் புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான பாலா கனகலிங்கம் (பாலா யசோ அன் கம்பனி யாழ்ப்பாணம்), பாலச்சந்திரன் (ஹொண்டா பாலா) மற்றும் இராஜேஸ்வரி (கனடா), தம்பிராஜா (தம்பி ஹொல்டிங் தனியார் நிறுவனம், தம்பி கொமினிகேசன், கொழும்பு, யாழ்ப்பாணம்), பாலேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம் (கனடா), தியாகராஜா (கனடா), வசந்தி (கொழும்பு), அம்பிகைபாகன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பொறளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் 14.06.2012 வியாழக்கிழமை 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: க.மு. தம்பிராஜா (தம்பி)
0777301961/0777382343

(8624)

# இன்று ஒரு தகவல்

## சரியான முடிவு எடுப்பது எப்படி?

மற்றவர்களுக்கு குல்லா போட்டே நம்மில் பெரும்பாலானோர் பழக்கப்பட்டு விட்டோம். அவ்வாறு செய்தால் தான் நாம் முன்னேற முடியும் என்ற நம்பி ஏமாறுகிறோம்.

ஆனால், முன்னேறத் துடிப்பவர்கள் தமக்குத்தாமே தொப்பி அணிந்து கொள்ள வேண்டும் என்கிறார் ஓர் அறிஞர்.

"சரியான முடிவு எடுப்பதற்கு ஆறு கற்பனைத் தொப்பி கள் அவசியம்" என்கிறார் எட்வேர்ட் டி. பேனா. இது இவருடைய பிரபலமான ஒரு கருத்து ஆகும்.

"Lateral Thinking" என்பது சிந்தனையிலே புதிய வகையான சிந்தனையாகும். அந்த வார்த்தையை உருவாக்கியதே அவர்தான்.

நாம் நமது வாழ்க்கையில் சரியான முடிவுகள் எடுப்பத ற்கு அவருடைய இந்தக் கருத்து மிகவும் உபயோகமாக இருக்கும்.

முக்கியமான முடிவுகளை எடுக்கும் போதெல்லாம் இந்தக் கற்பனைத் தொப்பிகள் ஆறினையும் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக அணிந்து கொண்டு முடிவு எடுக்க வேண்டும்.

**முதலில் வெள்ளைத் தொப்பி:-** முடிவெடுப்பதற்கு முதல் தேவை சரியான தகவல்கள். தகவல்களைத் திரட்டுவதுதான் வெள்ளைத் தொப்பி அணிவதன் நோக்கம்.

**இரண்டாவது பச்சைத் தொப்பி:-** இது கற்பனை சக்தியைக் குறிக்கிறது. இந்தத் தொப்பி, கிடைத்த தகவல்களை வைத்துப் புதுப்புது யோசனைகளை உற்பத்தி செய்யத் தூண்டுகிறது.

**மூன்றாவது மஞ்சள் தொப்பி:-** இதன் வேலை என்னவென்றால், பச்சைத் தொப்பி கொடுத்த யோச னைகளில் எது நடைமுறைக்குச் சரிப்பட்டு வரும். எது சரிப்பட்டு வராது என்பதை சரியாக இனம் கண்டு ஏனைய யோசனையெல்லாம் வடிகட்டி விடும்.

**நான்காவது கறுப்புத்தொப்பி:-** இது நியாய தர்மங்களைப் பாதுகாக்கும் தொப்பி. நடக்கக்கூடிய நமக்கு மட்டும் நன்மை தரக்கூடிய சுயநலமான யோசனையாக இருந்தால், "இது சமூகத்திற்குக் கேடானது. ஆபத்து நிறைந்தது" என்று இந்தத் தொப்பி எச்சரிக்கும்.

**ஐந்தாவது சிவப்புத் தொப்பி:-** இந்தத் தொப்பிக்கு தக்க அறிவு, தகவல், அறிவு பற்றியெல்லாம் தெரியாது. "ஏதோ என் மனதிற்குப்படுகிறது... அது சரியாக வரும்" என்று சொல்வோம் அல்லவா? இந்த உள்ளுணர்வு (Intuition) தான் சிவப்புத் தொப்பி.

**ஆறாவது நீலத் தொப்பி:-** ஏனைய ஐந்து தொப்பி கள் எடுத்து வைத்த வாதப் பிரதிவாதங்களை ஆராய் ந்து சரியான, தெளிவான இறுதி முடிவு எடுக்கும் தொப்பி இது.

இதுதான் எட்வேர்ட் டி.பேனா கூறும் கருத்து. இதைச் சுருக்கமாகப் புரிந்து கொள்வது எப்படி?

இப்போது ஏதோ ஒரு விடயத்திற்காக நாம் முடிவெடு க்க வேண்டும் என்று வைத்துக்கொள்வோம்.

முதலில் அது சம்பந்தப்பட்ட தகவல்களைத் திரட்ட வேண்டும். அந்தத் தகவல்களை அடிப்படையாக வைத் துக் கொண்டு புது யோசனைகளை உருவாக்க வேண் டும். இதில் உபயோகப்படாத யோசனைகளைக்கூட ஆராய வேண்டும்.

ஒரு விடயம் நமக்கு நல்லது என்று தோன்றினாலும், அதனால் ஏனையவர்களுக்கு ஏதும் இடையூறு இருக் குமா? என்று சிந்திக்க வேண்டும்.

அதன்பின் நம் உள்ளுணர்வு என்ன சொல்கிறது என்று பார்க்க வேண்டும். கடைசியாக எல்லாவற்றையும் ஆரா ய்ந்து ஒரு நல்ல, தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டும்.

இதுதான் எட்வேர்ட் டி.பேனா சொல்லும் ஆறு வகையான சிந்தனைத் தொப்பிகள்.

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் சில சந்தர்ப்பங்களில் இப்படி வரிசையாக பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

உடனடியாக முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல உண்டு. உதாரணமாக காற்பந்தாட்டத்தில் பந்தை உதைப்பதா அல்லது தடுப்பதா என்பது போன்ற நேரங்களில் சிவப்புத் தொப்பிதான் சரியானது.

அதாவது உள்ளுணர்வு அது கூர்மையாக இருக்க வேண்டும். அதற்கு மனம் தெளிவாக இருப்பது மிகமிக அவசியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வற்றாப்பளை கிராமத்திற்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

## நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள வற்றாப்பளை கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படாமையால் அப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மேற் குறித்த கிராமத்தில் 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் மின்சாரம் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

இக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் பூர்த்தியாகி ஒரு வருடம் ஆகியும் மின்சாரம் வழங்கப்படாமை கவலைக்குரிய விடயமாகும்.

இக்கிராமத்தில் உள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கும் வர்த்தக நிலையங்களுக்கும் ஒரு சில வீடுகளுக்குமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய வீடுகளுக்கோ கோவில்களுக்கோ பாடசாலைகளுக்கோ வர்த்தக நிலையங்களுக்கோ மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் அப்பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் மின்சாரத்தினூடாக வேலை செய்வோரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

யுத்தத்தின் பின் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் முதல் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நகர்க்கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினருக்கு பல தடவைகள் எழுத்து மூலமும் நேரடியாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, உரிய தரப்பினர் இதனை கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து இக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்கி கிராமம் ஒளிபெற உதவுமாறு அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# 46 குடும்பங்கள் திருமுறிகண்டி கிராமத்தில் குடியேற்றப்படுவர்

## முல்லை. அரச அதிபர் தகவல்

திருமுறிகண்டி கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்படாது செட்டிக்குளம் நலன்புரி நிலையங்களில் அப்பகுதி மக்கள் வசித்து வருகின்றனர்.

இவ்வாறு அடிப்படை வசதிகள் இன்றி யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகளாக நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் 46 குடும்பங்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். சமாதானம் ஏற்பட்டு இத்தனை வருடங்களாகியும் இம்மக்கள் தங்களது சொந்த இடங்களுக்கு செல்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை. இவர்கள் தமது வாழ்க்கையை முகாம்களிலேயே கழிக்க வேண்டிய அவல நிலை காணப்பட்டது. இதில் தற்போது முகாம்களில் வசித்து வரும் 46 குடும்பங்கள் திருமுறிகண்டி கிராமத்தில் குடியேற்றம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளது.

மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இன்னும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் வசித்து வரும் குடும்பங்களும் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர் என்றார். (அ-7-3-15)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 70 | 40 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 180 | 80 | 130 |
| தக்காளி | 130 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 50-60 | 80 | 70 |
| கரட் | 100 | 160 | 120 |
| பூசணி | 25 | 50 | 40 |
| புடோல் | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 150 | 100-160 | 100-120 |
| பெரிய வெங்காயம் | 95 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 150 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 90 |
| பயற்றங்காய் | 40-50 | 100 | 50 |
| லீக்ஸ் | 150 | 160 | 160 |
| பீற்றூட் | -- | 80 | 90 |
| கறிமிளகாய் | -- | 180 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 120 |
| போஞ்சி | -- | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 50 | -- |
| கீரை - 1 பிடி | 05 | 10 | 10 |
| தேசிக்காய் | 130 | 70 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 10-20 | 20 | 16-20 |

## இராசி பலன்

12.06.2012
(வைகாசி 30, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
அட்டமி முற்பகல் 9.13 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 9.06 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை

**மேடம்** தொழில் நன்மை கருதி வெளியூர் பயணம் ஒன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையும், கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிலசமயங்களில் உணர்ச்சி வசப்படுவீர்கள்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நிகழ்வதற்கான அறிகுறி தோன்றும், பொருள் வரவைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், 'புதிய பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கலகலப்பான சூழ்நிலை அமையும்.

**மிதுனம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, அந்நியர் மூலம் உதவிகள் கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைப்பீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**சிங்கம்** சஞ்சலங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினையை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வேலைச்சுமை கூடும், கௌரவக் குறைவான நாள்.

**கன்னி** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பயணத்தால் பலன் கிடைக்கும், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகும், போசன சுகமுண்டு.

**துலாம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் விலகும், பழைய வருமதியை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள்.

**விருச்சிகம்** பிள்ளைகளால் பெருமை சேரும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், மனதில் தாழ்ந்த சுபாவம் ஏற்படலாம், பூர்வ புண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


**தனுசு** பயந்த சுபாவங்கள் உருவாகலாம், கல்வியில் மேன்மையுண்டு, தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன சுகமுண்டு.

**மகரம்** இனிய அனுபவங்கள் ஏற்படும், அந்நியர் சந்திப்புக்களால் நன்மையுண்டு, விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், போசன நன்மையுண்டு.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும், பண வருவாய் திருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மீனம்** ஆழ்ந்த சிந்தனைகள் உருவாகலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

வளவன்



# உயிர் மீண்ட காளை மாடு 23

**நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் நீதிவான் திரு.மா. கணேசராஜா அவர்கள் முன்னிலையில்
வழக்கிலக்கம்:B/224/12 திகதி:30.04.2012

வழக்குத் தொடருநர் தரப்பில் யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சார்பில் உ.பொ.ப. ஹேமரத்ன சமூகம்.

யாழ். மாவட்டச் செயலக இந்து கலாசார அமைச்சின் சார்பில் தொழில் உத்தியோகத்தர் எஸ். உதயபாலன் சமூகம்.

அவர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு.இ.த.விக்கினராஜா அவர்கள் ஆஜராகின்றார்.

எதிரி சமூகம்.

அவரது நலனை அவதானிப்பதற்காகச் சட்டத்தரணி திரு.ஜொனி மதுரநாயகத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி நுஃமான் அவர்கள் ஆஜராகின்றார்.

**எதிரி சார்பில் மன்றில் தோன்றியுள்ள சட்டத்தரணி நுஃமான் அவர்கள் பின்வருமாறு மன்றுக்குச் சமர்ப்பணம் செய்கின்றார்.**

மாண்புமிகு நீதிபதி அவர்களே, இவ்வழக்குத் தொடர்பில் குறித்தமன்றால் 17.04.2012 அன்று இடப்பட்ட இணக்கக்கட்டளைக்கு இவ்வழக்கின் எதிரி கட்டுப்பட்டுள்ளார். இந்த மன்றின் கட்டளைக்கிணங்க அதாவது இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த மாட்டினைப் பாதுகாப்பு, பராமரிப்புச் செய்வதற்காக ஏற்பட்ட செலவு , இறைச்சிக்காக வெட்டப்படாததால் ஏற்பட்ட நட்டம் , பணரீதியான இழப்பு என்பவற்றை ஈடுசெய்வதற்கு ஏதுவான தீர்ப்பை வழங்குமாறு விண்ணப்பிக்கின்றேன்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குறித்த மாடானது ரூபா165,000/- இற்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை குறித்த மாட்டினை பண்ணையிலிருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டிற்குக் கொண்டு வருவதற்கு 5000/- செலவாகியுள்ளது. குறித்த மாட்டினை கொண்டு வந்த தினத்தில் இருந்து இன்று வரை (39 நாட்கள்) குறித்த மாட்டிற்கு மாஸ், புல், வைக்கோல் ஆகிய மூன்றுவகையான உணவையும் வழங்குவதற்கு நாள் ஒன்றிற்கு 1400/- செலவாகியுள்ளது.

மொத்தமாக 39 நாட்களிற்கு 54,000/- செலவாகியுள்ளது. அதேவேளை குறித்தமாட்டினை 39 நாட்கள் சுத்தம் செய்து பாராமரிப்பதற்கு நாள் ஒன்றிற்கு 800/- செலவாகியுள்ளது. மொத்தமாக 39 நாட்களிற்கு 31,200/- செலவாகியுள்ளது. அதேவேளை இவ்வழக்குத் தொடரப்பட்டதனால் வழக்குச் செலவாக 50,000/- எதிரிக்கு ஏற்பட்டுள்ளது. இந்த எதிரிக்கு மொத்தமான செலவாக 305,800-/ ஏற்பட்டுள்ளது. மேலும் மாட்டினை வெட்டி இறைச்சிக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பின் மொத்த இறைச்சி 800 Kg பெறப்பட்டிருக்கும். அதனை Kg ரூபா 500/- படி விற்பனை செய்யப்பட்டிருந்தால் ரூபா 400,000/- பெறப்பட்டிருக்கும். மாட்டினைக் கொள்வனவு செய்த ரூபா165,000/- கழித்தால், இலாபமாக ரூபா 235,000/- பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஒட்டுமொத்தமாகச் செலவுடன் இலாபத்தைச் சேர்த்துப் பார்க்கும்போது எதிரிக்கு நட்ட ஈடாக ரூபா 540,800/- கிடைக்க வேண்டும். கௌரவ மன்று நியாமானதுமான நிவாரணத்தை வழங்க வேண்டுமென மிகவும் மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

**முறைப்பாட்டாளர் சார்பில் மன்றில் தோன்றியுள்ள சட்டத்தரணி விக்னராஜா அவர்கள் பின்வருமாறு மன்றிற்கு சமர்ப்பணம் செய்கின்றார்.**

முறைப்பாட்டாளர் சார்பில் இன்று எதிரித்தரப்பில் மன்றிற்கு முன்வைத்த சமர்ப்பணத்தில்,மன்று இட்ட கட்டளையில் குறிப்பிட்ட அம்சத்தை சுட்டிக் காட்டி எதிரிக்கு முறைப்பாட்டாளர் சார்பில் செலுத்தவேண்டிய தொகைபற்றி மன்று பரிசீலனை செய்யுமாறு விண்ணப்பம் செய்துள்ளார். மன்று குறித்த விடயம் தொடர்பாக பின்வரும் முக்கியமான அம்சங்களை மன்றின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

கடந்த தவணை நீதிமன்று இந்தக் கட்டளையிடும்போது எதிரியானவர் அன்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கூற்று, சத்தியக்கூற்றுடன் சமர்ப்பித்த X1-X6 வரையான ஆவணங்களையும், முறைப்பாட்டாளர் சார்பில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் இவ்வழக்கை சுமூகமாக முடிப்பதற்கான நன்நோக்கில் பிறர் செய்யும் அன்பளிப்பு பணத்தின் மூலமே எதிரிக்கான பணத்தை செலுத்த வேண்டி இருப்பதாக கனம் மன்றின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். கனம் நீதிபதி அவர்களே நீதிநலன் கருதி எதிரிக்கு ரூபா 250,000/- செலுத்துவது தொடர்பில் குறித்த பணத்தை அன்பளிப்புச் செய்த அன்பர்களிடம் கலந்தாலோசித்தே தீர்மானம் எடுக்கவேண்டும். இது இந்துசமய நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் வகையில் நீதிபதி அவர்கள் சரியாக சுட்டிக்காட்டியவாறு இவ்வழக்கை தீர்த்து வைப்பதற்கு குறுகிய தவணை தருமாறு மன்றிடம் விண்ணப்பம் செய்கின்றேன்.

**கட்டளை**

இவ்வழக்கில் இரு தரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு வ்ருவதற்காக இம் மாட்டிற்கான நட்ட ஈடாக ரூபா 250,000 பெற்றுக் கொள்ளும் ஓர் இணக்கப் பாட்டிற்கு வருவதற்காக இரு தரப்பினரும் குறுகிய கால அவகாசம் கோரிய காரணத்தால் இணக்கப்பாட்டிற்காக குறுகிய தவணை வழங்கப்படுகின்றது.

மா.கணேசராஜா
நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
30.04.2012

**நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் நீதிவான் திரு. மாணிக்கவாசகர் கணேசராஜா அவர்கள் முன்னிலையில்
வழக்கிலக்கம்:B/224/12 திகதி:02.05.2012

வழக்குத் தொடுநர் சார்பில் யாழ்.பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸ் அதிகாரி சார்பில் உ.பொ.ப. ஹேமரத்ன பத்மஸ்ரீ சமூகம்.

முறைப்பாட்டாளர் சார்பில் யாழ்.மாவட்டச் செயலக இந்து கலாசார அமைச்சின் சார்பில் தொழில் உத்தியோகத்தர் எஸ். உதயபாலன் சமூகம்.

அவர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி இ.த.விக்னராஜா அவர்கள் ஆஜராகின்றார்

எதிரி சமூகம்

எதிரிசார்பில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் அவர்கள் ஆஜராகின்றார்

**இவ்வேளையில் முறைப்பாட்டாளர் சார்பில் தோன்றும் சிரேஷ்ட சட்டத்தரணி த.விக்னராஜா அவர்கள் மன்றுக்கு பின்வருமாறு சமர்ப்பணம் செய்கின்றார்.**

இவ்வழக்கில் நேற்று முன்தினம் எதிரி தரப்பால் தெரிவிக்கப்பட்ட இணக்கப்பட்டினை முறைப்பாட்டுக்காரரான அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தப்பட்டு முறைப்பாட்டாளர் சார்பில் இவ்வழக்கின் இணக்கப்பாட்டிற்கு ஏதுவாக எதிரிக்குச் செலுத்தவேண்டிய பணத்தை பொறுப்பேற்று வர்த்தக சங்கத்துடன் அரச அதிபர் தொடர்பு கொண்டு இணக்கப்பாட்டை வலுப்படுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் தெரிவித்த தொகையான ரூபா 2,40,000/- பணத்தை வணிகர் கழகம் செலுத்த முன்வருவதாகவும், எதிரி தரப்பில் திறந்த மனதுடனும் விசுவாசத்துடனும் உடன்பட்டு ரூபா 2,50,000/-குறிப்பிட்டதால் மிகுதி ரூபா 10,000/- பணத்தை முறைப்பாட்டாளர் சார்பில் செலுத்தத் தயாராக இருப்பதாக மன்றிற்கு தெரிவித்து மன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட காளையை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்குக் கொண்டு செல்வதற்காகத் தற்போது வர்த்தக சங்கத்தின் முன்னேற்றக் கழகத்தினால் அமைக்கப்பட்ட கூடாரத்தில் வைத்துப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதிலும், கௌரவ நீதிபதி அவர்களே! இக்காளை மாட்டினைப் பராமரித்து அவ்வப்போது அரச கால்நடை வைத்திய அதிகாரியினால் இக்காளை மாட்டின் மேற்பார்வையையும், ஆலோசனையையும் கீரிமலை நகுலேஸ்வர தேவாலய பிரதம குருக்களுக்கு தவறாது வழங்க வேண்டுமென்றும் மன்று இயற்கையின் நீதியின் பால் உரிய பணிப்புரையை வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

**இவ்வேளையில் எதிரி சார்பில் தோன்றும் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் அவர்கள் மன்றிற்கு பின்வருமாறு சமர்ப்பணம் செய்கின்றார்.**

மேற்படி வழக்கில் காளை தொடர்பாக எங்களுடைய கட்சிக்காரருக்கு மிகுந்த இழப்பு ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், சமூக நலன், பொது நோக்கம் கருதி நீதிமன்றின் வேுண்டுகோளுக்கு நாங்கள் அடிபணிந்து மேற்படி காளையை ரூபா 2,50,000/- நட்ட ஈடாகப்பெற்று யாழ்ப்பாண பிரபல மதஸ்தலமான நகுலேஸ்வரத்தின் மத வழிபாட்டிற்காக நாங்கள் பெருந்தன்மையுடன் வழங்க முன்வருகின்றோம். தவிரவும் மேற்படி காளையை எமது இடத்திலிருந்து அந்தக் கோயிலுக்கு கொண்டு செல்வதற்கு ஏற்படுகின்ற பயணச்செலவை எம்மீது அன்பு கொண்டுள்ள ஒருவர் வழங்க முன்வருவதாக நாங்கள் அறிந்து அதை நாங்கள் வழங்க தயாராக உள்ளோம். நாம் வசிக்கும் இடத்தில் முஸ்லிம் சமூகம் இருப்பதனால் சிலபல இடையூறுகளைத் தவிர்க்கும் முகமாக காளைமாட்டினைக் கொண்டு செல்வதற்கு நாங்கள் விரும்பவில்லை. இருந்தாலும் இக் காளை ஒரு மதத்திற்கான பொருள் என்பதால் மிக மரியாதையுடனும், மதச்சடங்கு முறையுடனும் எவ்வித ஆர்ப்பாட்டமும் இன்றி மேற்படி ஆலயத்திற்கு இக்காளையை ஒப்படைக்க வேண்டும் என்று கௌரவ நீதிமன்றை மிகவும் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

**கட்டளை**

மேற்படி இரு தரப்பினரது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட்டு காளைமாட்டினை நகுலேஸ்வரத்தில் ஒப்படைப்பதற்கு மன்று அனுமதி வழங்குகின்றது. மேலும் காளைமாடு சுகயீனமாக இருப்பதன் காரணத்தினால் கமநலசேவை வைத்திய அதிகாரியினை காலத்திற்குக் காலம் காளைமாட்டின் நலன் குறித்தும், சுகயீனம் குறித்தும் தொடர்ச்சியாகப் பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் மன்றும் கட்டளையிடுகின்றது. இன, மத நல்லிணக்கத்தின் அடிப்படையில் மன்று இக் கட்டளையை வழங்குகின்றது. மேற்படி இணக்கப்பாட்டிற்கு இரு தரப்பினரும் வழக்கேட்டில் கையொப்பம் இடவும்.

மா.கணேசராஜா
நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

விதுரன்

வளரும்

# மோசடி பேர் வழிகளால் ஏமாற்றப்படும் மக்கள்

(கரவெட்டி)

நெல்லியடியில் உள்ள தனியார் நிறுவனத்தில் உள்ள பணியாளர்கள் பொதுமக்களின் பல இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்து விட்டு தலைமறைவாகிய சம்பவமொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நெல்லியடியில் தனியார் நிறுவனத்தில் மீள் செலுத்தும் கடன் அடிப்படையில் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, குளிர்சாதனப் பெட்டி, மின்விசிறி போன்ற பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை பொது மக்கள் கொள்வனவு செய்தனர்.

இதில் பெரும்பாலானோர் அந்நிறுவன பணியாளர்களிடம் பணத்தை செலுத்திய போதும் அப்பணம் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படாது மோசடி செய்யப்பட்டுள்ளது.

பின் மோசடி செய்தவர்கள் அந்நிறுவனத்தை விட்டு தலைமறைவாகி சென்றுள்ளனர்.

இது தொடர்பாக நிறுவன முகாமையாளரிடம் பாதிக்கப்பட்ட மக்கள் முறையிட்ட போது அந்நிறுவன முகாமையாளர் அப்பணியாளர்கள் தமது நிறுவனத்தில் தற்போது பணியாற்றுவதில்லை எனவும் குறித்த மிகுதிப்பணத்தை காலங்கடந்து சென்றாலும் செலுத்த வேண்டுமெனவும் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் பாரிய நட்டத்தை எதிர்கொண்டதுடன் ஏமாற்றத்தையும் எதிர்கொண்டனர். (அ-3-24)

## செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்டபட்ட பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணித உபகரண பயன்பாடு தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணி வரை மாங்குளத் தில் உள்ள ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (அ-3-15)


இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



பதினெட்டாம் திருவிழா (12.06.2012)

இணுவில் நொச்சியம்பதி கந்தவேள் கட்டளைக்கலிப்பா



இணுவில் நொச்சியம்பதி கந்தன் மஹோற்சவம்
எண்ணியின்று பதினெட்டாம் திருவிழாவிலே
துணையாய் ஐங்கரன் சங்கரன் போல் வேளும்
தோன்றியே ஒரு குதிரை மேல் வருகிறான்
அணையும் காட்சியோ வேலுடன் மயிலுமாய்
அழகு செய்திட ஐயன் முருகவேள்
இணையும் நாவல் மரத்தினிற் காட்சியும்
இனிது சொல்லும் கதையும் அறிவீரே



இணுவில் முதுபெரும் புலவர் கலாபூசணம்
புலவர் மணி.வை.க.சிற்றம்பலம்

18ஆம் திருவிழா உபயகாரர்

(சி-081)


# காணாமல் போனோர் குறித்து பாதிக்கப்பட்ட மக்களிடம் விசாரிக்க ஐ.நா.ஆணையம் திட்டம்



(கொழும்பு)

**நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாக சாட்சியமளித்து பொதுமக்களுடன் கலந்துரையாடுவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் திட்டமிட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் உயர் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

முறைப்படியான இந்த வேண்டுகோளை இலங்கை அரசாங்கம் நிராகரித்தால் மூன்றாவது தரப்பின் ஊடாக இந்தக் கலந்துரையாடல்கள் நடத்தப்படக்கூடும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணத்துக்கு முன்பதாக உண்மையை கண்டறியும் குழுவொன்றை அனுப்புவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதன் அடிப்படையிலேயே இந்தக் கலந்துரையாடலுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த வேண்டுகோள் நவநீதம்பிள்ளையின் இலங்கை பயணத்துக்கு முன்னதாக உண்மையை கண்டறியும் குழுவை அனுமதிக்க விடுக்கப்பட்ட வேண்டுகோளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இந்த நேர்முகத்துக்கு முறைப்படியான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை .

போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த போராளிகள் காணாமற்போனதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் இது தொடர்பாக சாட்சியமளித்தோரிடம் விரிவாக கலந்துரையாடவுள்ளதாக நம்பப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. (அ-2)

# ஹெலி வீழ்ந்து நொருங்கியது கென்யா அமைச்சர் உயிரிழப்பு

(நைரோபி)



கென்யாவில் உலங்குவானூர்தி விழுந்து நொருங்கியதில் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் சைடோட்டி உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.கென்யாவின் உள்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ் சைடோட்டி மற்றும் 5 பேர் தலைநகர் நைரோபியில் இருந்து பொலிஸ் உலங்குவானூர்தியில் அருகில் உள்ள ஒரு இடத்துக்குச் சென்றனர். அப்போது நைரோபிக்கு அடுத்துள்ள ஒரு காட்டுப் பகுதியில் திடீரென உலங்குவானூர்தி விழுந்து நொருங்கியது. அதில் பயணம் செய்த ஜார்ஜ் உட்பட 6 பேரும் உடல் சிதறி பலியாகினர். இயந்திரக் கோளாறு ஏற்பட்டு மரத்தில் மோதியிருக்கலாம் என்று பொலிஸார் கூறினர்.

கென்ய பிரதமர் ரைலா ஒடிங்கா கூறுகையில், அமைதியான முறையில் தேர்தல் நடத்த ஏற்பாடுகள் செய்து வரும் கால கட்டத்தில் இப்படி துயரமான நிகழ்ச்சி நடந்துள்ளது.

அத்துடன் ஜார்ஜ் அமெரிக்காவில் பயிற்சிபெற்ற பொருளாதார நிபுணர். கென்யஅரசியலில் முக்கியத்துவம் பெற்றிருந்த அவர் அரசின் செய்தித் தொடர்பாளராக இருந்தவர். அவர் அடுத்த தேர்த லில் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடப் போவதாக அறிவித்திருந்தார். அதற்குள் இப்படியொரு துயரமான முடிவு ஏற்பட்டு விட்டது என்றார். (2)


## கிறிஸ்தவ சேமக்காலைக்குப் பொருத்தமான காணி கோரல்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கோண்டாவில் இந்து மயானங்களுக்கு அருகில் கிறிஸ்தவ சேமக்காலை அமைப்பதற்கு பொருத்தமான காணி கொள்வனவு செய்ய சபை தீர்மானித்துள்ளது. எனவே மேற்படி பொருத்தமான காணியை விற்பனை செய்ய விரும்புபவர்கள் தலைவர், நல்லூர் பிரதேசசபை அல்லது கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தொலைபேசி இல:-0213202207, 0212222700

ப.வசந்தகுமார்
தலைவர்,
நல்லூர் பிரதேசசபை. (சி/243)


## பூசகர் பயிற்சி ஒத்திவைப்பு

(முல்லைத்தீவு)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் அந்தணரல்லாத இந்துப் பூசகர் பயிற்சிநெறி முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிநெறியானது தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ம.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

மேலும் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படும் போது விண்ணப்பதாரிகளுக்கு திணைக்களத்தின் மூலம் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## இராணுவவீரர் கைது

(கொழும்பு)

சயனைட் குப்பி ஒன்றை வைத்திருந்த இராணுவ வீரர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலநறுவை புலஸ்திபுர பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த படைவீரரிடமிருந்து கைத்துப்பாக்கி மற்றும் துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புகளினால் பயன்படுத்தப்பட்ட சயனைட் குப்பியை வைத்திருந்தாரா என்பது பற்றி விசாரணை நடத்தப்படவுள்ளது. (அ-7)


## Cars For Sales

KE. 55 Model Toyota Corella 12- oxxx white colour, Maruti 800 JX- xxxx Red Colour (Maruti with lease)


Contact-0772963262

(8619)

# பல்கலை. ஊழியர்கள் தொழிற்சங்க போராட்டம்; கொடும்பாவி எரிப்பு

(யாழ்ப்பாணம்)

**உயர் கல்வி அமைச்சு பல்கலைக்கழக தொழிற் சங்க கூட்டுக் குழுவுடன் மேற்கொண்ட கூட்டு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கங்கத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உருவப் பொம்மை எரித்து எதிர்ப்பு போராட்டம் நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் நடத்தப்பட்டது.**



இந்த எதிர்ப்புப் போராட்டம் தொடர்பாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் சி.தங்கராஜா தெரிவிக்கையில்,

கடந்த வருடம் 8 ஆம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களினால் சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டம் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமானது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சிடம் சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரிக்கை விடுத்து இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக கடந்த வருடம் 8 ஆம் மாதம் 4 ஆம் திகதி உயர் கல்வி அமைச்சிற்கு முன்பாக பிக்கெற்றிங் போராட்டமும் நடைபெற்றன.

இதன் தொடர்ச்சியாக இந்த வருடம் முதலாம் மாதம் 26 ஆம் திகதி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தமும் 2 ஆம் மாதம் 23, 24 ஆம் திகதிகளில் இருநாள் அடையாள வேலை நிறுத்தமும் 29 ஆம் திகதி தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டமும் ஆரம்பமானது.

இதனிடையே 2 ஆம் மாதம் 29 ஆம் திகதி உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் தொழிற்சங்க கூட்டுக்குழுவிற்கும் இடையில் *கூட்டு உடன்படிக்கை* மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் உயர் கல்வி அமைச்சு அதனை அமுல்படுத்தாது இழுத்தடிப்பு செய்தது.

எனவே, அதனை அமுல்படுத்திக் கோரி கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி கொழும்பிலுள்ள உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றின் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோம். அதன் தொடர்ச்சியாக கடந்த மே மாதம் 22, 23 ஆம் திகதிகளில் அடையாள வேலை நிறுத்தமும் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், கூட்டுக்குழு உடன்படிக்கை அமுல்படுத்தப்படவில்லை. எனவே, கூட்டுக்குழு உடன்படிக்கையை அமுல்படுத்த கோரியும் 25 வீத மேலதிக கொடுப்பனவு வழங்கக் கோரியும் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் தொடர்ச்சியான போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

எமது போராட்டத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நசுக்கப் பார்க்கிறது. அத்தோடு வேலையை விட்டு நிறுத்தி விடுவோம் எனவும் எச்சரிக்கை விடுகின்றது.

நாடளாவிய ரீதியில் கல்விசாரா ஊழியர்கள் 12 ஆயிரம் பேர் பல்கலைக்கழகங்களில் பணிபுரிந்து வருகின்றனர். யாழ். பல்கலைக்கழகத்தில் 600 இற்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிகின்றனர்.

எந்த அச்சுறுத்தலுக்கும் நாம் அடிபணியப் போவதில்லை கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும்.

எம்முடன் செய்து கொண்ட சம்பள உடன்படிக்கையை பல்கலைக்கழக ஆணைக்குழு அமுல்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என எழுதப்பெற்றிருந்த பதாகையை தாங்கியவாறு உருவபொம்மையொன்று ஊழியர்களினால் பல்கலைக்கழக வளாகத்தினுள் இழுத்துக் கொண்டு திரியப்பட்டதோடு இந்துக்களின் முறைப்படி இறந்த ஒருவருக்கு செய்யப்படும் இறுதிக் சடங்குகள் செய்யப்பட்டு ஒப்பாரி வைத்து உருவ பொம்மை தீ மூட்டப்பட்டது.

அத்தோடு வெடிபோட்டும் உருவ பொம்மையை அடித்தும் தமது எதிர்ப்பினை ஆர்ப்பாட்டத்தின் போது வெளி ப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## சக்கரநாற்காலியை பெற்றுக்கொள்ளவும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் சக்கரநாற்காலிக்காக விண்ணப்பித்தவர்களில் ஒருவருக்கான சக்கரநாற்காலி சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் மட்டுவில் வடக்கு கதிரன் செல்லன் என்புவருக்கே இச்சக்கரநாற்காலி வழங்கப்படவுள்ளது.


மேற்குறித்த நபரை ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் தென்மராட்சி பிர்தேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு சமூகம் தரும்படி தென்மராட்சி பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (அ-3-29)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப்பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீட பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம், மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சங்குவேலி, கட்டுடை, சுதுமலை, கோண்டாவில், இணுவில் பிரதேசம், தாவடி, குளப்பிட்டி பிரதேசம், தட்டார் தெருப் பிரதேசம், கோம்பயன்மணல் பிரதேசம், நாச்சிமார் கோவிலடி, உரும்பிராய், மருதனார் மடப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-9)




## பொதுக்கூட்டம்

(கரவெட்டி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்று க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி செம்மலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு உரியவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-24)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் க.பொ.த.உயர்தர மாணவிகளின் 13 ஆவது ஒளியை நோக்கி சஞ்சிகை வெளியீட்டு விழா நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.போதனா வைத்தியசாலையின் உளநல வைத்தியர் கலாநிதி திருமதி ப.முல்லை உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் 13 ஆவது ஒளியை நோக்கி சஞ்சிகை வெளியிட்டு வைப்பதனையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:-எஸ்.செல்வதீபன்)*

# கிழக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனை விதிப்பு

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்திற்கு நிபந்தனை விதித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளரை நிறுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் வேட்பாளரை நிறுத்தும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து தேர்தலில் போட்டியிட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தனிக்கட்சியாக தேர்தலில் போட்டியிட நேரிடும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் விசேட கூட்டமொன்று நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் தமது கட்சிக்கு பெரும்பான்மை பலம் காணப்படுவதாகவும் இவ்வாறான ஓர் நிலையில் வேறும் அரசியல் கட்சியொன்றுடன் இணைந்து போட்டியிட வேண்டிய அவசியம் கிடையாது எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார். (அ-2)

# த.தே.கூட்டமைப்பு குரோத அரசியலை முன்னெடுக்கிறது

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கட்சி குரோத அரசியலை முன்னெடுத்து வருவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரசன்ச தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,'தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் குடியேற்றங்களுக்கு கூட்டமைப்பு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றது.

சிங்கள மக்கள் சிங்கள கிராமங்களிலும் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் கிராமங்களிலும் தமிழ் மக்கள் தமிழ் கிராமங்களிலும் குடியேற்றப்பட வேண்டும் என்பது இனவாத நடவடிக்கையாகும். இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வருகின்றது.

அனைத்து இன மக்களையும் ஒரே கிராமத்தில் குடியேற்றுவதன் மூலம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். தேச ஒற்றுமை பற்றி எவ்வளவு பேசினாலும் சிலருக்கு நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்பட வேண்டுமென்பதேவிருப்பமாக அமைந்துள்ளது.

நாட்டில் இன முறுகல் நீடிக்க வேண்டுமென விரும்பும் தமிழ் மற்றும் சிங்களத் தரப்புக்கள் இருக்கின்றன. முரண்பாடுகள் நீங்கி விட்டால் தம்மால் டொலர்கள்ள சம்பாதிக்க முடியாது என்ற ஏக்கமே இந்த நிலைமைக்கான காரணம்.

கொழும்பை விடவும் வடக்குக் கிழக்கு வீதிகள் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. வடக்குக் கிழக்கு அபிவிருத்தி செய்யப்படுவதனை சிலர் விரும்பவில்லை என்றார். (அ-2)

# மாகாண சபைத் தேர்தலை நடத்த சுயாதீன ஆணைக்குழுக்கள் வேண்டும்

(கொழும்பு)

சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்து மாகாண சபைகளின் தேர்தல்களை ஒரே நாளில் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் மஸ்கெலிய தொகுதி அமைப்பாளரும் மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவருமான கே.கே. பியதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தல்களை அங்கொன்றும் இங்கொன்றுமாய் நடத்தி மீண்டும் மக்களின் நிலைப்பாடுகளை கொள்ளையடிக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

மாகாண சபை தேர்தல் ஊடாக நாட்டு மக்களின் நிலைப்பாடுகளை மீண்டும் அரசாங்கம் கொள்ளையிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மேலும் அதிகரிக்கக் கூடும்.

தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாவும் நடைபெற வேண்டுமாயின் பொலிஸ் தேர்தல், அரச சேவை மற்றும் நீதி ஆகிய துறைகளின் சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்காது தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. அரச பணம், வளங்கள், வாகனங்கள் உள்ளிட்ட அரச சொத்துக்களை பயன்படுத்தி வன்முறைகளை ஏவி தேர்தலில் வெற்றி பெறுவதே அரசாங்கத்தின் நோக்கம்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எப்படியாவது தேர்தலை நடத்தி மக்கள் ஆதரவு அரசாங்கத்திற்கு இருக்கின்றது என காண்பிக்க முயற்சிக்கப்படுகிறது. சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்து தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் அரசாங்கம் நடத்துமானால் அனைத்து மாகாண சபைகளையும் ஐக்கிய தேசியக் கட்சியே கைப்பற்றும் எனவும் மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)




★ 1429-நூற்றாண்டுகள் போர்: ஜோன் ஒஃப் ஆர்க் தலைமையில் பிரெஞ்சு இராணுவம் ஆங்கிலேயர்களிடம் இருநீது ஜார்கூ என்ற இடத்தைக் கைப்பற்றியது.

★ 1775- அமெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானிய இராணுவத் தளபதி தொமஸ் கேஜ் மசாசுசெட்சில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தார். தமது ஆயுதங்களைக் கீழே வைக்கும் அனைத்துக் குடியேற்றக் காரர்களுக்கும் மன்னிப்பு அளிப்பதாக அறிவிக்கப்பட்டது.

★ 1830- 34ஆயிரம் பிரெஞ்சுப் படைகள் அல்ஜீரியாவை அடைந்ததில் இருந்து பிரெஞ்சுக் குடியேற்றம் அந்நாட்டில் ஆரம்பமாகியது.

★ 1898-பிலிப்பைன்ஸ் ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1899-ஐக்கிய அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்தில் இடம்பெற்ற சூறாவளியில் 117 பேர் உயிரிழந்தனர்.

★ 1902-அவுஸ்திரேலியாவின் நான்கு மாநிலங்களில் பெண்கள் பொதுத் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். அவுஸ்திரேலியப் பழங்குடிகள் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.

★ 1934-பல்கேரியாவில் அரசியற் கட்சிகள் தடை செய்யப்பட்டன.

★ 1935-பொலிவியாவுக்கும் பராகுவேயிற்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டு மூன்றாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: 13 ஆயிரம் பிரித்தானிய மற்றும் பிரெஞ்சுப் படைகள் பிரான்சில் ஜேர்மனியரிடம் சரணடைந்தனர்.

★ 1943-நாசி ஜேர்மனியர் மேற்கு உக்ரைனில் ஆயிரத்து 180 யூதர்களைப் படுகொலை செய்தனர்.

★ 1964-தென்னாபிரிக்க நீதிமன்றம் நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்தது.

★ 1967- சோவியத் ஒன்றியம் வெனேரா 4 விண்கலத்தை வெள்ளிக்கோளை நோக்கி ஏவியது. வேறொரு கோளின் வளிமண்டலத்துள் சென்று தகவல்களைப் பூமிக்கு அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 1987-மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் பேரரசர் ஜீன்-பெடெல் பொக்காசாவுக்கு அவரது 13 ஆண்டுகால ஆட்சியில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக மரண தண்டனை அறிவிக்கப்பட்டது.

★ 1990-ரஷ்யக் கூட்டமைப்பின் நாடாளுமன்றம் சோவியத் ஒன்றியத்தில் இருந்து ரஷ்யாவின் விடுதலையை முறைப்படி அறிவித்தது.

★ 1991-போரிஸ் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதியானார்.

★ 1991-மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் 65 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1999-நேட்டோ தலைமையிலான ஐ.நா. அமைதிப் படை கொசோவோவினுள் நுழைந்தது.

★ 2005-அருளானந்தம் சுரேஸ் ஜோக்கிம்டென் பின் பௌலிங் (ten bin bowling) என்ற விளையாட்டினை ரொரண்டோவின் உலக சாதனைக்காக 100 மணித்தியாலங்கள் தொடர்ந்து விளையாடி தனது முப்பதாவது கின்னஸ் உலக சாதனையினை நிலை நாட்டினார்.

★ 2006-கூகுள் எர்த் லினக்ஸ் பதிப்பு வெளியிடப்பட்டது.

★ 2006-காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தொழிலாளர்கள் 8 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர்.

**பிறப்புக்கள்**

★ 1932-பத்மினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ.2006)

★ 1942-பேர்ற் சக்மன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய உடற்றொழிலியலாளர்


★ 1957-ஜாவெட் மியன்டாட், பாகிஸ்தானின் முன்னாள் துடுப்பாளர்

**சிறப்பு நாட்கள்**

★ பிலிப்பைன்ஸ் சுதந்திர தினம்

★ உலகக் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினம்


★ ரஷ்யா- ரஷ்ய தினம் (1990)



**★ 1924- அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சின் பிறந்த தினம்**

# தமிழர்களின் அரசியல்தீர்வு தொடர்பில் தெளிவான நிலையில் மத்திய அரசு

## தமிழக எம்.பி.நாச்சியப்பன் தெரிவிப்பு



(சென்னை)

**இலங்கை தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் டில்லி தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. குறிப்பாக வடக்குக் கிழக்கு மீள்குடியேற்றம் தொடர்பில் இந்தியா மிகுந்த அவதானம் செலுத்தி வருகின்றது என்று காங்கிரஸின் தமிழக எம்.பி.சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆகவே, இலங்கை அரசாங்கம் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் என்பவை தொடர்பில் ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம்.

உள்நாட்டில் மாத்திரமல்லாது வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றுள்ள இலங்கை தமிழர்கள் அனைவரும் அவர்களின் சொந்த இடங்களிலேயே மீள்குடியமர்த்தப்பட வேண்டும். இதற்காகவும் இந்தியா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

யுத்தத்தின் போதும் அதற்கு பின்னரும் இலங்கையின் விடயங்கள் குறித்து இந்தியா அவதானிப்புடனேயே உள்ளது. குறிப்பாக இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் என்பன தொடர்பில் உள்நாட்டு அரசுடன் பலமுறை பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

எனவே, இலங்கை வாழ் தமிழ் உறவுகளின் பிரச்சினைகளுக்கான தீர்வில் தெளிவான நிலைப்பாட்டிலேயே இந்தியா உள்ளது. அரசியல் தீர்வு மாத்திரமல்ல, மீள்குடியேற்றம், கலாசார மரபுரிமைகள் என்பவற்றை பேணிப் பாதுகாக்க வேண்டும். வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் போன்ற பல தரப்பட்ட விடயங்கள் குறித்து இந்தியா அவதானம் செலுத்தியுள்ளது.

இறுதியாக இலங்கைக்கு விஜயம் செய்த போது அங்கு தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நிகழ்கால பிரச்சினைகளை அவதானித்தோம். குறிப்பாக மெனிக்பாம் முகாம் மக்கள் இன்னும் துரதிர்ஷ்டவசமான வாழ்க்கையினையே எதிர்கொள்கின்றனர்.

இன்னும் தீர்க்கப்படாத காணாமல் போனவர்களின் விடயம் என்பவை தொடர்பில் மத்திய அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். டில்லியின் முன் நகர்வுகளும் ஆக்க பூர்வமானதாகவே உள்ளது என்றார். (அ-2)




முறிகண்டியில் இருந்து அக்கராயன் வரை செல்லும் வீதியில் அக்கராயன் வைத்தியசாலைக்கு அருகாமையில் நாட்டப்பட்டுள்ள பெயர்ப்பலகையில் தமிழின் பரிதாபகர நிலை...

# பொதுநோக்கு மண்டபங்களை மக்களின் பாவனைக்கு தாருங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(சிவநகர்)

உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் கிராம அலுவலர் பிரிவுகளில் பொது நோக்கு மண்டபங்கள் இன்மையால் பல செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இக்கிராமங்களில் பொது நோக்கு மண்டபங்கள் காணப்பட்ட போதிலும் கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக இவை சேதமடைந்துள்ளன. நெக்கோட் உதவித்திட்டத்தின் மூலம் பொதுநோக்கு மண்டபங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு பல மாதங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரையில் மக்களின் பாவனைக்கு விடப்படவில்லை.

இதனால் இரு கிராமங்களின் கிராம அலுவலக அலுவலகங்களும் தனியார் வீடுகளிலேயே இயங்கி வருகின்றன. மேலும் பொது மக்களின் தேவைகளைக் கருதி அரச, அரச சார்பற்ற நிறுவன கூட்டங்கள், கருத்தரங்குகள் ஆகிய வற்றை பாடசாலைகள், முன்பள்ளிக் கட்டடங்கள் என்பவற்றில் நடாத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளதாக பொது அமைப்புக்களும் பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, பொறுப்பான அலுவலர்கள் உரிய முறையில் செயலாற்றி பொது நோக்கு மண்டபங்களை பொது மக்களின் தேவை நலன் கருதி பயன்படுத்த கையளிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ-2-9-254)

# இஸ்ரேலில் இலங்கை அகதிகள் மூவர் கைது

இஸ்ரேலில் சட்டவிரோதமாக தங்கியிருந்த மூன்று இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும் அவர்கள் எந்த இனத்தை சேர்ந்தவர்கள் என்ற விடயம் தெரிய வரவில்லை. இஸ்ரேலிய பொலிஸார் நடத்திய சோதனையின்போது இவர்கள் உட்பட்ட தென் சூடான், நைஜீரியா மற்றும் ஐவரி கோஸ்ட் ஆகிய நாடுகளின் சுமார் 150 அகதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இஸ்ரேலின் உள்துறை அமைச்சில் தம்மை பதிவு செய்து கொள்ளாமை காரணமாகவே கைது செய்யப்பட்டதாக இஸ்ரேலின் உள்துறை அமைச்சர் எலி இசாய் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட அனைவரும் ஒரு வாரத்துக்குள் சுயமாகவே இஸ்ரேலை விட்டு வெளியேறுவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி




(6609)

### சரவணமுத்து இந்திரராசா (இந்திரன்)

(ஓய்வுபெற்ற இயந்திர இயக்குநர் இ.மி.சபை, சுன்னாகம்)

திதி:-12.06.2012

தந்தைக்கு இலக்கணமாய் தரணியிலே வாழ்ந்தீர்கள்
பண்பாக எங்களையும் வளர்த்து ஆளாக்கினீர்கள்
பார்போற்ற நாம் வாழ பாதை காட்டினீர்கள்
உங்கள் குரல் ஓய்ந்து ஆண்டொன்று ஆகிவிட்டதப்பா
இது கனவாகக் கூடாதா என இன்றும் மனம் ஏங்குதப்பா
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எம்மை என்றும் ஆண்டுகொண்டே இருக்கும் அப்பா
என்றும் உங்கள் இனிய நினைவுகளுடன்

ஐயனார் கோவிலடி,
மல்லாகம்.

குடும்பத்தினர்.


# அடிப்படை வசதிகளின்றி றெட்பானா பொதுச்சந்தை

## நடவழிக்கை எடுக்கக்கோரிக்கை

(றெட்பானா)

றெட்பானா பொதுச்சந்தை அடிப்படை வசதிகள் மற்றும் நிரந்தர கட்டடம் இன்றி இயங்கி வருகின்றது. நிரந்தரக் கட்டடம் உள்ள போதிலும் அவற்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் அக்கட்டடத்தில் விஸ்வமடு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகின்றது.

இந்நிலையில் இப் பகுதி சில்லறை வியாபாரிகள் தெரு ஓரங்களில் சிறிய கொட்டகைகள் அமைத்து நாளாந்த வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இச் சந்தைக்கான நிரந்தர கட்டடம் ஒன்றைக்கோரி கிராம அபிவிருத்தி சங்கம் ஊடாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு முறையிடப்பட்டு பல மாதங்களைத் தாண்டியும் எவ்விதமான முன்னேற்ற நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. எனவே, விரைந்து நிரந்தர கட்டடத்தை பெற்றுத் தருமாறு வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-260)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 155

தற்போதைய போலந்தில் 2 ஆம் உலகயுத்த நினைவுச்சின்னம்



1945 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி காலையில் 1-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் பலத்த பூர்வாங்க பீரங்கிப்படைத் தாக்குதலுக்குப் பின் தாக்குதலில் இறங்கின. காலாட்படையும் டாங்கிகளும் இரட்டைப் பீரங்கித் தாக்குதல் அலையின் உதவியோடு இரண்டு மணி நேரத்தில் எதிரியினுடைய தற்காப்பின் இரண்டு நிலைகளைப் பிளந்தன. பாசிஸ்டுகளின் உறுதியான எதிர்ப்பை முறித்த சோவியத் துருப்புகள் அடுத்த நாள் காலைவாக்கில் 35 கி.மீ. நீளத்திற்கும் 20- 25 கி.மீ. ஆழத்திற்கும் எதிரி தற்காப்பின் நேரடி நடைமுறை மண்ட லத்தை முற்றிலுமாகப் பிளந்தன. ஜனவரி 15 ஆம்திகதி கேல்ட்ஸே பிரதேச்த்தில் எதிரியின் டாங்கிப் படைத்திரட்டு முறியடிக்கப்பட்டது. எதிரியை முறியடிப்பதில் 2-வது வான்படை தரைப்படையினருக்குப் பெரிதும் உதவியது. இந்த வான்படை விமானிகள் நாளொன்றிற்கு சுமார் 700 பறத்தல்களை நடத்தினர். இவற்றில் 400 பறத்தல்கள் கேல்ட்ஸே மற்றும் ஹிமேல்னிக் பிரதேசங்களில் இருந்த பாசிச டாங்கிப்படை வரிசைகளின் மீது நடத்தப்பட்டது. ஜனவரி 17 ஆம் திகதி போலந்தின் பெரிய இராணுவ-தொழிற்துறை மையமாகிய சென்ஸ்டகவ் விடுவிக்கப்பட்டது. கிராக்கவ் திசையில் சேனையின் இடப்புறத்துருப்புகள் வெற்றிகரமாகத் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டன. 59-வது, 60-வது படைகளின் துருப்புகள் தாக்குதலின் முதல் இரண்டு நாட்களில் தற்காப்பின் நேரடி நடைமுறை மண்டலத்தைப் பிளந்து கொண்டு ஜனவரி 18 வாக்கில் கிராக்கவ் நகரின் நுழைவாயில்களை 10 மணி வாக்கிலேயே இவை பாசிஸ்டுகளின் முதல் நிலையைப் பிளந்தன. முன்னணி பட்டாலியன்களின் நடவடிக்கைகள் பொது அடைந்தன.


சென்ஸ்டகவ்- கிராக்கவ் கோட்டை அதாவது, 120-140 கி.மீ. ஆழத்தை அடைந்ததன் மூலம் 1-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ஐந்து நாட்களுக்கு முன்னதாகவே தமது உடனடிக்கடமையை நிறைவேற்றின. பாசிச ஜேர்மனியத் துருப்புகள் பின்வாங்கத் தொடங்கின.

1-வது பைலோருஷ்ய சேனையின் துருப்புகளும் வெற்றி கரமாகத் தாக்குதலைத் தொடங்கின. ஜனவரி 14 ஆம் திகதி விடியற் காலையில் 25 நிமிடநேர பீரங்கி மழைக்குப்பின் பலப்படுத்தப்பட்ட முன்னணி பட்டாலியன்கள் எதிரியைத் தாக்கின. பீரங்கித் தாக்குதல் அலை இவற்றின் நடவடிக்கைக்கு ஆதரவளித்தது. காலை தாக்குதலாக வளர்ந்தன. நாளின் முடிவில் ஜேர்மனியர்களின் தற்காப்பு 12- 22 கி.மீ. ஆழத்திற்குப் பிளக்கப்பட்டது.

அடுத்த இரண்டு நாட்களின் 1-வது, 2-வது கார்டு டாங்கிப் படைகள் பிளவிற்குள் அனுப்பட்டன. சேனையின் விமானப் படையும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது. ஜனவரி 16 ஆம் திகதி மட்டும் இது 3470 விமானத் தாக்குதல்களைத் தொடுத்து எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது.

ஜனவரி 17 ஆம் திகதி சுற்றி வளைந்து செல்லும் தந்திரத்தின் மூலம் சோவியத் துருப்புகள் போலந்து இராணுவத்தின் 1-வது படையோடு சேரந்து போலந்தின் தலைநகரமாகிய வார்ஸாவை விடுவித்தன.

ஜேர்மனியப் படைகளிடமிருந்து மீட்டபோது முற்றிலும் சிதைந்திருந்த வார்சோ நகர்



## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்

போலந்து மீட்கப்பட்டபோது ஜேர்மனியர்களின் நச்சுவாயு - படுகொலை முகாம்



விடுவிக்கப்பட்ட நகரம் உயிரிழந்த நிலையிலிருந்தது. வார்ஸாவின் அழகு மிருகத்தனமாக பாசிஸ்டுகளால் அழிக்கப்பட்டிருந்தது, துக்கத்தை ஏற்படுத்தியது. நகரத்தின் வளம் கொழிக்கும் வரலாற்று, கட்டடக்கலை நினைவுச் சின்னங்களையும் விஞ்ஞான செல்வங்களையும் ஆக்கிரமிப்பாளர்கள் கொள்ளையடித்து, அழித்து ஒழித் திருந்தனர். இக்கொடுங்கோலர்கள் தலைநகரத்தின் மிகப் பெரும் புனிதமான யான்மாதா கோயிலை வெடிவைத்து தகர்த்திருந்தனர். அரண்மனையையும் ஆப்பேரா மற்றும் பாலே நாடக மன்றத்தையும் அழித்திருந்தனர். ஆயிரக்கணக்கான போலந்து மற்றும் வெளிநாட்டு கையெழுத்துப் பிரதிகள், பழைய அச்சேடுகள், வரைபடங்கள், தேசப்படங்கள் அடங்கிய நூலகங்களை எரித்திருந்தனர். 1939 ஆம் ஆண்டின் இறுதியில் நகரத்தில் 13 இலட்சத்து 10 ஆயிரம் நபர்கள் வாழ்ந்தார்கள் என்றால், நகரம் விடுவிக்கப்பட்ட போது அதில் 1 இலட்சத்து 62 ஆயிரம் நபர்கள் மட்டுமே இருந்தனர்.

வார்ஸா விடுவிக்கப்பட்ட செய்தி மின்னல் வேகத்தில் பரவியது. அடுத்த நாளே நகர வாசிகள் சொந்த நகரத்திற்குத் திரும்பிவர ஆரம்பித்தனர். போலந்து மக்கள் தம்மை விடுவித்தவர்களை மகிழ்வோடு வரவேற்றனர். எல்லா இடங்களிலும் தானாகவே கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. ஒவ்வொரு போலந்துக் குடிமகனும் செஞ்சேனை மற்றும் போலந்து இராணுவ வீரர்களுக்கு நன்றி சொல்லவும் மகிழ்வோடு இவர்களுக்கு வரவேற்பளித்து, இயன்ற உதவி புரியவும் முயன்றான்.

தற்காலிக போலந்து அரசாங்கம் சோவியத் அரசாங்கத்திற்கு அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: "கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட எங்களுடைய தலைநகரமாகிய வார்ஸா விடுவிக்கப்பட்டதாலும் இலட்சக்கணக்கான எங்களுடைய சகோதர, ச்கோதரிகளும் ஆயிரக்கணக்கான நகரங்களும் கிராமங்களும் விடுவிக்கப்பட்டதாலும் மகிழ்ச்சியோடு நெகிழ்ந்துள்ள நாங்கள், போலந்து மக்கள் அனைவரின் சார்பிலும் புகழ்மிகு செஞ்சேனைக்கும் சோவியத் மக்கள் அனைவருக்கும் ஆழந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்"

பாதிக்கப்பட்டிருந்த வார்ஸாவிற்கு சோவியத் அரசாங்கம் பெரும் உதவி அளித்தது. 60 ஆயிரம் டன் ரொட்டியும் ஏராளமான மருந்துகளும் இலவசமாக வார்ஸா மக்களுக்கு அனுப்பப்பட்டன.

(தொடரும்)

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 02:- எவ்வகை நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் தேவைப்படும்?**

**பதில்:-** பின்வரும் நோயாளிகளுக்கு இன்சுலின் தேவைப்படும்.

❖ முடக்கு வாதம், இதய நோய், கண் நோய் அல்லது பார்வை இழப்பு, சிறுநீரக பாதிப்பு உடையவர்கள்.

❖ தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நீரிழிவு நோயாளிகள் மற்றும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளவிருக்கும் நோயாளிகள்.

❖ நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்கள்.

❖ இன்சுலினைச் சார்ந்திருக்கும் குழந்தைகள் மற்றும் நீரிழிவு நோயாளிகள்.

❖ மருந்து மாத்திரைகள் சாப்பிட்டும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள்.

**கேள்வி03:- இன்சுலின் என்னென்ன அளவுகளில் கிடைக்கிறது?**

**பதில்:-** இன்சுலின் 40 யூனிட்டுகள் மற்றும் 100 யூனிட்டுகள் என்று இரண்டு அளவுகளில் கிடைக்கிறது. எனவே, ஊசி வாங்கும் பொழுது அது எத்தனை யூனிட்டுகள் பிடிக்கும், மருத்துவர் எத்தனை யூனிட்டுகள் எடுத்துக்கொள்ள சொன்னார் என்று அறிந்து கொள்வது அவசியம். இப்போது எண் 30 கேஜ் இன்சுலின் ஊசி கிடைக்கிறது. இதில் வலி அவ்வளவாகத் தெரியாது.

**கேள்வி 04:- இன்சுலின் ஊசி எப்படிப் போட்டுக் கொள்ள வேண்டும்?**

**பதில்:-** ஆரம்பத்தில் நோயாளிகள் தங்கள் மருத்துவரிடமே இன்சுலின் ஊசி போட்டுக்கொள்ள வேண்டும். ஒரு சில நாட்களில் அவர்களாகவே போட்டுக் கொள்ளலாம். அதைக் கற்றுக்கொள்வது ஒன்றும் கடினமல்ல.

நோயாளி 2 C.C. சிரிஞ்சைப் பயன்படுத்த வேண்டும். இதில் ஒவ்வொரு C.C. யும் 1/10 பங்கு என்ற வீதத்தில் பிரிக்கப்பட்டிருக்கிறது. போத்தலில் இன்சுலின் 40 யூனிட்டுகள் இருந்தால் 1/10 பங்கு என்பது 4 யூனிட்டுக்களாகும். ஊசி போட்டுக் கொள்ளும் பொழுது நோயாளி தன்னிடம் ஸ்பிரிட் மற்றும் பஞ்சினை வைத்துக் கொள்ள வேண்டும். இன்றைய தினம் மருத்துவர்கள் ஒரு முறை மட்டுமே உபயோகிக்கின்ற (disposable) ஊசியைப் பயன்படுத்தும்படி கூறுகின்றனர். இந்த ஊசியை ஒரு முறை பயன்படுத்திவிட்டு தூரப் போட்டு விடலாம்.

முதலில் இன்சுலின் போத்தலைக் கையிலெடுத்து நன்கு குலுக்கிக் கொள்ளுங்கள். பின்னர் போத்தல் மூடியை ஸ்பிரிட்டில் நனைத்த பஞ்சினால் துடைத்துக் கொள்ளுங்கள். மூடியினுள் ஊசியைச் செலுத்தி மருத்துவர் சொன்ன அளவு இன்சுலினை எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் உடலில் எப்பகுதியில் ஊசி போட வேண்டுமோ அப்பகுதியையும் ஸ்பிரிட்டில் நனைத்த பஞ்சினால் துடைத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு நாளும் உடலில் ஊசி போடும் இடத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். இடம் மாற்றி ஊசி போடுவதே நலம் பயக்கும்.

**கேள்வி 05:- இன்சுலினை எப்படிப் பாதுகாப்பது?**

**பதில்:-** இன்சுலினை பாதுகாக்க பின்வரும் வழி முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

❖ இன்சுலினை குளிர்சாதனப்பெட்டியில் 2-8°C தட்ப வெப்ப நிலையில் வைக்க வேண்டும்.

❖ உறைந்த இன்சுலினை உபயோகப்படுத்தக் கூடாது. அதனால் இன்சுலினை பிறீசர் பெட்டியில் வைக்கக்கூடாது.

❖ குளிர்சாதனப்பெட்டி வசதி இல்லாதவர்கள் இன்சுலினை குளிர்ச்சியான இருண்ட இடத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

❖ இன்சுலினை சூரிய ஒளி படும் இடத்தில் வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் அது தனது வீரியத்தை இழந்து விடும்.

❖ இன்சுலினை உஷ்ணமான இடங்களில் அதாவது சூரிய ஒளி வரும் ஜன்னல், கார் அல்லது பேருந்தின் ஓட்டுநர் இருக்கை அருகில், டேப் ரெக்கோர்டர், டி.வி. இவற்றின் மேல் வைக்கக்கூடாது.

❖ விமான பயணத்தின் போது இன்சுலின் போத்தல்களை ஒரு பையில் போட்டு எடுத்துக் செல்லுங்கள். அப்போதுதான் தேவைப்படும் நேரத்தில் பயன்படுத்த முடியும்.

❖ பயணிக்கும் பொழுது இந்நோய் தீவரமடைவதற்கான வாய்ப்பு அதிகம் உண்டு. அப்போது உங்களுக்கு அதிக அளவு இன்சுலின் தேவைப்படும். எனவே, வெளிநாடு அல்லது தொலைதூர பயணங்களில் போதுமான அளவு இன்சுலின் எடுத்துச் செல்லுங்கள். இல்லையேல் நீங்கள் பயன்படுத்தும் அதே நிறுவனத்தில் இன்சுலின் அதே வீரியம் அல்லது ஆற்றல் உள்ள இன்சுலின் கிடைக்காமல் போகும் சந்தர்ப்பம் நேரலாம்.


❖ நீங்கள் பயன்படுத்தும் இன்சுலின் போத்தலை அறையின் தட்ப வெப்ப நிலையில் (25°C) குறைந்த பட்சம் ஒரு மாதம் வைத்திருக்க வேண்டும். இன்சுலின் பழுப்பு நிறமாக இருந்தாலோ அல்லது அதில் வெள்ளைத் துகள்கள் மிதந்தாலோ அதை ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது.

**கேள்வி 06:- இன்சுலின் ஊசியை காலையில் போட மறந்து விட்ட ஒருவர் மாலையில் இரண்டு ஊசிகளாகச் சேர்த்து போட்டுக் கொள்ளலாமா?**

**பதில்:-** முதலில் நீரிழிவு நோயாளி ஒழுங்காக ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். ஏதோ ஒரு காரணத்தினால் காலையிலோ மாலையிலோ இன்சுலின் ஊசி போட மறந்து விட்டது என்றால் ஒரே சமயத்தில் இரண்டு ஊசிகளைச் சேர்ந்தாற்போல் போட்டுக் கொள்ளக்கூடாது. இதனால் ஹைப்போக்ளைஸீமியா போன்ற பெரிய பிரச்சினை ஏதேனும் வரக்கூடும்.

**கேள்வி 07:- நீரிழிவு நோயை இன்சுலின் ஊசி போட்ட பின்னர் மருந்து மாத்திரைகளினால் கட்டுப்படுத்த முடியாதா?**

**பதில்:-** நீரிழிவு நோயாளி தொற்று வியாதியால் பாதிக்கப்பட்டிருந்தாலோ கருவுற்ற காலத்திலோ அல்லது அறுவை சிகிச்சை செய்து கொண்ட பிறகோதான் அவருக்கு இன்சுலின் ஊசி போடப்படுகிறது. நோயுற்றவர் ஒழுங்காக இன்சுலின் ஊசி போட்டு அவரது சீனி அளவு கணிசமாகக் குறைந்து




11

விட்டதென்றால் அப்போது அவர் இன்சுலின் எடுப்பதை நிறுத்திக்கொண்டு மருந்து மாத்திரைகளைத் தொடர்ந்து உட்கொள்ளலாம். இவ்வாறு அவர் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தலாம். பொதுவாக நீரிழிவு நோயாளிகள் இன்சுலினுடன் சேர்ந்து மருந்து மாத்திரைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றே அறி

## டாக்டர்.A.K.ஜிங்கான்

வுறுத்தப்படுகின்றனர்.

**கேள்வி 08:- இன்சுலின் மற்றும் மருந்துகளினால் ஒருவரின் எடை அதிகரிக்குமா?**

**பதில்:-** இல்லை. அவ்வாறு அதிகரிக்காது. நோயுற்றவரின் உடல் எடை அதிகரிப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. இன்சுலின் அல்லது மருந்துகளை ஒழுங்காக எடுத்து உணவு விடயத்தில் ஒருவர் கட்டுப்பாடில்லாமல் இருந்தால் ஒருவரின் உடல் எடை அதிகரிக்கும். உணவுக் கட்டுப்பாடு, ஒழுங்கான உடற்பயிற்சி இல்லை என்றால் உடல் எடை அதிகரிக்கும். அதே போன்று இன்சுலின் எடுத்த பின்னர் ஒருவரின் சிறுநீரில் சீனி ஒரு சிறிதும் இல்லையென்றால் அவருக்கு அதிகமாகப் பசியெடுக்கும். அதனால் ஒருவரின் உடல் ஒரு சில மாதங்களில் ஒன்றிரண்டு கிலோ அதிகரிக்கலாம்.

இரண்டாவதாக ஒருவர் அளவிற்கதிகமாக இன்சுலின் அல்லது மருந்து மாத்திரைகள் எடுத்துக்கொண்டால் அது அவரது பசியை அதிகரிக்கும். அதனாலும் அவரது உடல் எடை அதிகரிக்கும்.

**கேள்வி 09:- பயணிக்கும் பொழுது இன்சுலினை எடுத்துச் செல்ல ஏதேனும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உள்ளனவா?**

**பதில்:-** அதிக உஷ்ணம் மற்றும் அதிக குளிரிலிருந்து இன்சுலினை பாதுகாக்க வேண்டும். இன்சுலினை எப்போதும் நிழலான இடத்தில் வைத்திருக்க வேண்டும். அதனால் பயணிக்கையில் இன்சுலின் பேனா எடுத்துச் செல்வது நல்லது. காரணம் அதனை பத்திரமாக வைத்திருந்து பயன்படுத்தலாம். இன்சுலின் பேனாவை ஒருவர் தனது சட்டைப் பையில் கூட வைத்திருக்க முடியுமே!

(தொடரும்)

# துர்நாற்ற வியர்வையால் அவஸ்தையா? தப்பிக்க இலகு வழி

கோடை வந்தாலே அழையா விருந்தாளியாக வியர்வையும் சேர்ந்து கொள்கிறது. சிலரது வியர்வை நாற்றம் தாங்க முடியாதது. இத்தனைக்கும் பார்க்க டிப்டொப்பாக இருப்பார்கள். இன்னும் சிலர் வாசனைத்திரவியங்களை உடம்பில் தேவைக்கு அதிகமாகவே தெளித்திருப்பார்கள். ஆனால், அதையும் தாண்டி இந்த வியர்வை நாற்றம் எட்டிப்பார்த்து விடுவதுதான் கொடுமை. அக்கினி நட்சத்திரவெயிலுக்கும் வியர்வைக்கும் பயந்து ஏ.சி.யே கதி என்று கிடப்பவர்களும் இருக்கிறார்கள்.

வியர்வையின் அளவை வைத்துத்தான் நமது உடல் வெப்ப நிலையையே கணக்கிட முடியும் என்கிறார்கள் மருத்துவர்கள். மனிதர்கள் அனைவருக்கும் வியர்வை சுரப்பி ஒரே எண்ணிக்கையில் தான் இருக்கும். அந்த சுரப்பிகள் இயங்கும் தன்மையில்தான் அதிகம் குறைவு என்று வேறுபடும். உண்மையில் வியர்க்காமல் இருந்தால்தான் பிரச்சினை. அதேநேரம் அதிகம் வியர்ப்பதும் ஒருவித நோய் பாதிப்பின் தன்மையாக இருக்கலாம். இப்படிப்பட்டவர்கள் மருத்துவரை சந்தித்து தங்கள் அதிக வியர்வைக்கான காரணத்தை தெரிந்து கொண்டு அதற்கேற்ப சிகிச்சை மேற்கொள்ளலாம்.

வியர்வையினால் நம் உடலில் துர்நாற்றம் வருவதில்லை. உடலில் சேர்ந்துள்ள



நச்சுப்பொருள் வியர்வையோடு வெளியேறும் போதுதான் வியர்வை துர்நாற்றம் வீசுகிறது. வியர்த்த இடத்தை உடனே சுத்தப்படுத்தாமல் போகும் போது உருவாகும் பக்ரீரியா இன்பெக்ஷனால் வியர்வை ஒருவித கெட்ட வாசனையை வெளியிடுவதும் நடக்கிறது.

வியர்வையில் இரண்டு விதங்கள் உண்டு. சிலருக்கு உடல் முழுக்க ஒரே மாதிரி வியர்க்கும். சிலருக்கு முகம், தலை, வயிறு, தொடை, அக்குள் என்று குறிப்பிட்ட இடங்களில் மட்டும் வியர்க்கும். உடல் பருமன் அதிகமாக இருப்பதும் வியர்வைக்கு காரணமாக அமைந்து விடுகிறது. சிலர் மசாலா நிறைந்த உணவை ஆர்வமாய் சாப்பிடுவார்கள். இவர்களிடம் இருந்து வெளிப்படும் வியர்வை துர்நாற்றம் நிறைந்ததாய் மாறி விடுகிறது. துர்நாற்ற வியர்வையால் அவதிப்படுகிறவர்கள் மசாலா, பூண்டு, வெங்காயம் தவிர்ப்பது நல்லது. உடம்பு நன்றாக வியர்த்து விட்டால் உடனே குளிப்பவர்கள் பக்ரீரியா இன்பெக்ஷனில் இருந்து தப்பி விடுவார்கள். இப்படி குளிப்பவர்கள் ஒரு மாத்திரை அளவு கற்பூரத்தை வாளி தண்ணீரில் போட்டு முகத்தில் படாமல் உடலுக்கு மட்டும் ஊற்றி குளிக்கலாம். வியர்வை நாற்றம் விலகி விடும்.

கோடையை சமாளிக்கும் விதத்தில் தினமும் 3 லீற்றர் தண்ணீர் பருகுங்கள். அதோடு இந்த கோடையில் தவறாமல் கிடைக்கும் இளநீர், பனை நுங்கு, பதநீர் பருகுங்கள். வியர்வை கட்டுப்படுவதோடு வெளிப்படும் கொஞ்ச வியர்வையும் நாற்றம் இல்லாததாக இருக்கும்.

வியர்வையில் துர்நாற்றம் ஏற்படுவதற்கு பெண்களின் வெள்ளைப்படுதலும் முக்கிய காரணம். உரிய மருத்துவ ஆலோசனை மூலம் இம்மாதிரி பெண்களின் வியர்வையை நாற்றம் இல்லாததாக மாற்றலாம்.

# தமிழர்களின் கலாசாரத்தை அடியோடு இல்லாமல் செய்வதே அரசின் திட்டம்

## ஈழமே எங்கள் இறுதி நோக்கம் என்கிறார் சிறிதரன் எம்.பி.

**(கொழும்பு) புலம்பெயர் மக்கள் மற்றும் தமிழக மக்களுடன் சேர்ந்து *தனித்தமிழ் ஈழத்தை உருவாக்குவோம், ஈழமே எங்கள் இறுதி நோக்கம்* என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார். வீக்கெண்ட் லீடர் இணையத்தளத்திற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தலைவராக யார் இருந்தாலும் சிங்கள அரசியல் வாதிகள் அவர்களுக்கு சம மரியாதை கொடுத்து மதிப்பது கிடையாது.

இந்நிலையில் தமிழர்களோடு சிங்களவர்கள் சமாதான பேச்சுவார்த்தைக்கு வருவது எப்படி? அப்படி வந்தாலும் அது எழுத்துமூலமாகவே இருக்கும். நேரடிப் பேச்சுவார்த்தையாக இருக்க முடியாது.

சமீபத்தில் நடந்த பேச்சுவார்த்தை கூட சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே நடந்தது. சர்வதேச சமூகமும் இந்தியாவும் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினால் ஈழத் தமிழர்களுக்கு தீர்வு காணமுடியுமே தவிர சிங்களவர்களால் தமிழர்களுக்கு எவ்வித தீர்வும் கிடைக்கப்போவதில்லை.

நாட்டில் தற்போதைய நிலையில் முள்ளிவாய்க்காலில் சிங்கள அரசினால் படுகொலை செய்யப்பட்ட ஈழ மக்களுக்கான துக்க நாளைக் கூட அனுஷ்டிக்க சுதந்திரம் இல்லை. தற்போதும் இராணுவத்தினரின் கண்காணிப்பிலேயே யாழ்.பல்கலைக்கழகம் காணப்படுகின்றது.

நான்கு நாட்களுக்கு முன்னர் மாணவர்களுக்கு புத்தகம் கொடுப்பதற்காக பாடசாலைக்கு சென்ற போது இராணுவத்தினர் சுற்றி நின்று படம் எடுத்தனர். பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலைமை என்றால் மற்றவர்களுக்கு எப்படி இருக்கும். இதை எப்படி சுதந்திரமான நாடு என்று சொல்ல முடியும். எனக்கே இந்த நிலைமை என்றால் மக்களுக்கு சுதந்திரம் எங்கே இருக்கப் போகிறது.

சிங்களவர்கள் புத்தரின் கொள்கைகளையும் பாரம்பரியங்களையும் தமிழர்களிடம் திணிக்க நினைக்கின்றனர். இவ்வாறு அரசாங்கம் செய்வதனால் காலப்போக்கில் தமிழர்கள் வெளிநாட்டவர்களாக கருதப்படுவார்கள்.

இதேவேளை, தமிழ்ப்பெண்களை இராணுவத்தினர் திட்டமிட்டு குறிவைத்துள்ளனர். குழந்தையைக் கூட துஷ்பிரயோகம் செய்கின்றார்கள்.

சிங்களவர்கள் தமிழர்களின் கலாசாரத்தையும் மூலதனத்தையும் அடியோடு இல்லாமல் செய்வதற்கு திட்டமிட்டு இவ்வாறான செயல்கள் செய்யப்படுகின்றன.

இராணுவ முகாமெல்லாம் தற்போது பாடசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. அதனால் எவ்வாறு பாடசாலை இயங்கும். அடிமை உணர்வு மிகவும் பயங்கரமாக நடத்தப்படுகின்றது. இவ்வாறு நடந்து கொண்டிருந்தால் இன்னும் மூன்று வருட இறுதியில் தமிழர்கள் தமது கனவு, அமைதி, கலாசாரம் எல்லாவற்றையும் இழந்து ஒரு அநாதையைப் போல தாய் நாட்டில் இருப்பார்கள்.

அண்மையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சிங்களக்கொடியை ஏந்தியமைக்கு சர்ச்சைகள் எழுந்தன.

1987-2002 வரை விடுதலைப்புலிகள், அரசாங்கத்திடம் பகிரங்கமாக சவால் விடுத்தார்கள். ஆனால், நாம் அமைதியான சூழலையே எதிர்பார்க்கின்றோம். ஏனெனில், தற்போது இருக்கும் எந்த மக்களையும் நாம் இழக்க விரும்பவில்லை. எமது கட்சியில் பாகுபாடு இருந்தாலும் தனி ஈழத்தை உருவாக்கும் வரை இணைந்தே வேலை செய்வோம்.

நாட்டில் தற்போது நடைபெறும் செயற்பாடுகளை நோக்கும் போது நம்மை நாம் பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

ஏனெனில், மூன்று இலட்சம் பேர் விடுதலைப் போரில் தியாகம் செய்துள்ளனர். 90 ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். 25 ஆயிரம் பேர் அநாதைகளாக உள்ளனர். இதில் 40 ஆயிரம் போராளிகளை இழந்துள்ளோம்.

ஆனால், சிங்கள அரசாங்கம்இதை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்படியே போனால் இந்த நாடு சிங்கள அரசாங்கத்தின் கையிலேயே போகும். நமது கௌரவத்தையெல்லாம் விட்டு அவர்களோடு போகவேண்டும். அல்லது நமது வழியில் நாம் செல்ல வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ந-8-6)

# கண்ணைக்கட்டி காட்டில் விட்டுவிட்டது அரசாங்கம்

## குறைபட்டுக்கொள்கிறார் தமரா



ஐ.நா.மனிதவுரிமை பேரவையின் 20 ஆவது அமர்வு அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தக் கூட்டத்தொடருக்கான தயாரிப்பு ஏற்பாடுகள் தொடர்பாக தமக்கு தகவல் ஏதும் தெரிவிக்காமல் இலங்கை வெளிவிவகார அமைச்சு இருளில் விட்டுள்ளதாக ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி தமராகுணநாயகம் குற்றம் சாட்டியுள்ளார்.

ஐ.நா.மனிதஉரிமைகள் பேரவையின் 20 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகி ஜுலை மாதம் முதல்வாரம் வரை நடைபெறவுள்ளது. இந்த முறை இலங்கை விவகாரங்கள் குறித்த விவாதம் ஏதும் நடத்தப்படாது. அது குறித்து அதிகாரபூர்வமாக பட்டியலிடப்படவில்லை. ஆனால், அரசசார்பற்ற நிறுவனங்களும் அனைத்துலக குழுக்களும் இலங்கைக்கு எதிராக பரப்புரை செய்வதில் ஆர்வம் கொண்டுள்ளன. பொறுப்புக் கூறல் மற்றும் ஊடக உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து அரசசார்பற்ற நிறுவனங்கள் பரப்புரை செய்யக்கூடும் என்றும் தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம, தமரா குணநாயகம் விடுமுறையில் இருப்பதாக கூறியுள்ளார். ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியான தமரா குணநாயகத்துக்கு பதிலாக அடுத்த மாதம் ரவிநாத் ஆரியசிங்க பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இந்த ஆண்டில் மாகாண தேர்தல் இடம் பெறக்கூடிய சாத்தியமுண்டு

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு - அரசாங்கம் மறுப்பு


இந்த ஆண்டில் தேர்தல்கள் நடத்தப்படக்கூடிய சாத்தியம் கிடையாது என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் திணைக்கள நாட்காட்டியின் அடிப்படையில் இந்த ஆண்டில் இடைத்தேர்தல்கள் எதனையும் நடத்தக்கூடிய வாய்ப்புக் கிடையாது. சில மாகாண சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட உள்ளதாக வெளியாகும் தகவல்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

மாகாண சபை தேர்தல் நடத்துவது குறித்து இதுவரையில் அரசாங்கம் எதனையும் அறிவிக்கவில்லை. மூன்று மாகாண சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படவுள்ளதாக செய்தித்தாள் வழியாக அறிந்து கொண்டேன் என்றார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாராச்சி, இந்த ஆண்டில் மாகாண சபைத்தேர்தல் நடத்தக்கூடிய சாத்தியம் காணப்படுவதோடு ஆட்சிக்காலம் முடிவடையும் முன்னரே சில மாகாணசபைகள் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படலாம்.

குறிப்பாக வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. எனவே, எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் சகல மாகாணசபைகளுக்குமான தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கையாகும் என்றார்.

இதேவேளை, மாகாணசபை கலைப்பு மற்றும் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்புக்களையும் வெளியிடவில்லை என்பதுடன் கிழக்கு மாகாண சபை உள்ளிட்ட மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளதாகவும் அதற்கான வேட்பாளர் தெரிவு, பிரசாரம் போன்ற முன்னாயத்த நடவடிக்கைகளில் பல அரசியல் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)



வடமராட்சி வலயத்தின் விஞ்ஞான தின நிகழ்வுகள் அண்மையில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் உரையாற்றுவதையும் வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# தமிழ் தலைமைகளின் கூட்டு மக்கள் கட்சியாக மாறவேண்டும்

**ஊடகவியலாளர் தர்மரெட்ணம் சிவராம் மற்றும் ஐயாத்துரை நடேசன் ஆகியோரது எட்டாவது நினைவு தினம் கடந்த வியாழக்கிழமை (07-06-2012) அன்று கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் அனுட்டிக்கப்பட்டது. இலங்கை தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்விற்கு ஒன்றியத்தின் தலைவர் அனந்தன் பாலகிருட்ணர் தலைமை தாங்கினார். அந்நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரச்யல் விஞ்ஞானத்துறையில் வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றும் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் கலந்து கொண்டு *தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகள்* குறித்து உரை நிகழ்த்தினார். அவ்வுரையின் விபரம் வருமாறு:**

திரு. சிவராம் அவர்கள் இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் நன்கு அறியப்பட்ட ஒரு ஊடகவியலாளர். ஊடகத்துறை என்பது உலக அளவில் ஜனநாயகத்தை தாங்கி நிற்கும் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது. பாரம்பரியமாக சட்டவாக்கம், நிர்வாகம், நீதித்துறை ஆகிய மூன்றுமே ஜனநாயகத்தின் மூன்று முக்கிய தூண்களாக கருதப்பட்டது. ஜனநாயகக் கோட்பாடுகளை, அதன் சாரம்சங்களை மறுதலிக்கும் அளவிற்கு ஜனநாயகம் பெயரளவில் செயற்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அவற்றைச் சுட்டிக்காட்டி, தட்டிக்கேட்டு கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் இடையே இடைவெளியைக் குறைக்கும் செயற்பாட்டினால் ஊடகம் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகப் பார்க்கப்படுகின்றது. இத்தகைய முயற்சிகளில் அதியுயர் விலையாகத் தம்முயிரையும் அர்ப்பணித்த ஊடக் வியலாளர் ஏராளம். இவ்வகையில் ஜனநாயகத்திற்கெதிரான, ஜனநாயகத்திற்கு அஞ்சும் சக்திகளால் சிவராம் பலிஜெடுக்கப்பட்டார்.

இன்றைய உலகில் ஜனநாயகத்தைக் காக்கும் ஐந்தாவது தூணாக சிவில் சமூகம் பார்க்கப்படுகின்றது. மனித உரிமைகளைக் காக்கப் போராடுதல், ஊழல்களுக்கெதிராகப் போராடுதல், மதசார்பின்மை அல்லது பக்கச்சார்பின்மைக்காகப் போராடுதல் ஆகியன உயிர்ப்பான ஜனநாஜகத்திற்கு அவசியம் என்ற வகையில் சிவில் சமூகம் ஐந்தாவது தூணாகப் பார்க்கப்படுகின்றது. அமரர் சிவராம் ஓர் ஊடகவியலாளர் என்பதையும் தாண்டி தமிழ் அரசியல் தலைமைகளின் ஒற்றுமைக்காகப் பங்களிப்பு செய்தவர்களில் ஒருவராவார். உருவாக்கப்பட்ட ஒன்றுபட்ட அமைப்பு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதை நோக்கி நகர்கின்றதா? அல்லது குறுகிய கட்சிநலன் சார்ந்த செயற்பாடுகளை நோக்கி நகர்கிறதா என்கிற கேள்வி இன்று மக்கள் மத்தியில், ஊடகங்கள் மத்தியில் எழுந்திருக்கின்றது. ஒன்றுபட்ட தமிழ்த் தலைமையின் உருவாக்கம், போக்கு தேவைப்படும் மாற்றங்கள் பற்றி ஆராய்வதே எனது நோக்கம்.



இன்று இருக்கின்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டு ஏன் உருவாயிற்று? யாரால் உருவாயிற்று? மக்களின் தேவைகளை, எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்யும் வகையில் கட்டமைக்கப்பட்டதாக இருக்கிறதா? அல்லது பெயரளவிலான கூட்டாக இருக்கின்றதா? என்ற கேள்விகள் விடை காணப் படவேண்டியவை மட்டுமின்றி, அதற்கேற்ப போதிய மாற்றங்களுக்குள்ளாக வேண்டியதாகவும் உள்ளது.

கூட்டு உருவாகுவதற்கு ஏதுவானவையாக பின்வரும் காரணிகளைக் கொள்ளலாம்.

1. தமிழ்த் தலைமைகள் பிரிந்து செயற்பட்டதால் உறுதியான அரசியல் முன்னெடுப்புகளை ஆற்ற முடியாதவர்களாக இருந்தனர்; இவர்களை பல்லுப்பிடுங்கப்பட்ட பாம்பாக அரசு கையாண்டமை.

2. பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிட்டு தமிழ்மக்களுக்கான பிரதிநிதித்துவத்தில் ஆறு ஆசனங்கள் வரை இழக்கும் நிலை ஏற்பட்டது.

3. இவர்களின் கருத்துக்கள் அரசுகளினால், கணக்கிலெடுக்கப்படாது ஆயுதத் தலைமையுடன் மட்டுமே பேசும் போக்கைக் கொண்டிருந்தமையால் பேச்சுவார்த்தைக்கான பலத்தைக் கொண்டிருந்த அமைப்பை பேச்சுவார்த்தைகளில் பலப்படுத்துவதன் மூலம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற, அனுபவப் பாடம் ஆகியிவற்றைக் கொள்ளலாம்.

ஒன்றுபட்ட கட்சிகளெல்லாம் மேற்சொன்ன மூன்று காரணிகளையும் புரிந்து ஏற்று கூட்டமைப்பை உருவாக்க முன்வந்தார்களா? அல்லது சிலர் மேற்சொன்ன எல்லாக்காரணங்களையும் புரிந்து முன்வர, சிலர் ஓரிரு காரணங்களை மட்டும் முன்னிலைப் படுத்தி வந்தார்களா என்ற கேள்வி விடைகாணப்பட வேண்டிய ஒன்றாகும்.

கட்சிகள் அரசினால் அலட்சியப் படுத்தப் பட்டதனால் மக்களுக்கு கட்சிகள் மீதான நம்பிக்கைகள் வீழ்ச்சியடைந்தன. எனவே மக்கள் ஆதரவைப் பெற வேண்டுமானால் ஒன்றுபட்ட பலமான அமைப்பாதல் மூலமே அரசு தமிழ்த் தலைமையைக் கணக்கிலெடுக்கும் என்ற நிலை. எனவே ஒற்றுமைக்கு மக்களே உந்து சக்தியாக இருந்தனர்.




அதிகப்பிரதிநிதித்துவம் மக்களுக்கு அவசியமாக இருந்தது. ஏனெனில் அவர்களின் குரல் போதிய அளவுக்கு ஒலிக்க வேண்டும் என அவர்கள் விரும்பினர். எனவே பிளவுண்டு நிற்பதால் விரக்தியடைந்தனர். விளைவு ஆறு ஆசனங்கள்வரை இழக்கும் நிலை ஏற்பட்டது. இங்கும் மக்களே வாக்குகளால் ஒற்றுமைக்கான அழுத்தங்களைப் பியோகித்தனர்.

பேச்சு வார்த்தைக்குப் பலம் கொண்ட அமைப்பைப் பலப்படுத்த வேண்டும் என்கின்ற மனநிலையை ஒருபுறம் அரசும் மறுபுறம் மக்களும் தோற்றுவித்தனர். ஆக இந்த கூட்டின் ஆதார சக்திகள் மக்களே. எனவே, மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஓர் உறுதியான கூட்டமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாடு அனைத்துத் தலைவர்களுக்கும் உண்டு.

ஜனநாயக அரசியலின் மையம் என்பது வாக்குகளை மையப்படுத்திய கட்சி அரசியல், கட்சி என்பது, தான் சார்ந்த மக்களின் இலக்குகளை நோக்கி அவர்களை அழைத்துச் செல்லும் வாகனம் என்றும் சொல்லாம். சாதாரண ஜனநாயக சூழ்நிலையில் தேவைப்படும் கட்சிமுறைக்கும், ஜனநாயகம் மறுக்கப்படுகின்ற சூழ் நிலையில் தேவைப்படும் கட்சிமுறைக்கும் பாரிய வித்தியாசங்கள் உண்டு. அதிலும் குறிப்பாக பெரும் பான்னை யினரின் அடக்குமுறைக்கு எதிராக சிறுபான்மையினம் உரிமைகளை நிலநாட்டப் போராடுகின்ற-இனவாத அதிகாரத்துவ புறச் சூழ்நிலையில்- சிறுபான்மைக் கட்சிகளின் தேவை மிக வித்தியாசமானது. அது ஒரு கட்சி என்பதையும் தாண்டி ஒரு மக்கள் இயக்கத்தை வழிநடத்தும் வகையில் கட்டமைக்கப்பட்ட பலமான கட்சி யாக இருக்க வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை நாம் எத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்நிலையிலிருந்து மீண்டு எமது இலக்கிற்கு மக்களை அழைத் துச் செல்ல கட்சி என்கிற வாகனம் வலுவானதாக, பெரிதானதாக, வேகம் மிக்கதாக இருக்க வேண்டும். இன்று தமிழர் தரப்பின் தலைமை அவ்வாறிருக்கின்றதா?

பலமான எதிரியை- உறுதியான எதிர்ப்புகளை-சவால்களைச் சந்திக்கவல்ல, கிடைக்கும் சிறுசந்தர்ப்பங்களையும் உச்சமாகப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க கட்டமைக்கப்பட்ட கட்சியும், கொள்கை வகுப்பு, மூலோபாய உருவாக்கம், பல்முனைத் தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவல்ல தலைமை- இவற்றைச் செம்மையாகச் செயற்படுத்தவல்ல செயல் வீரர்களைக் கொண்ட ஒரு கட்சியினாலேயே இன்று தமிழ் மக்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் பாரிய சுமைகளைக் குறைக்கவும் உரிமைகளுடன் கூடிய கௌரவமான வாழ்வையும் உத்தரவாதப்படுத்தும் திசையை நோக்கி விடயங்களை நகர்த்த முடியும். "அழுதபிள்ளைதான் பால் குடிக்கும்","அழுதும் பிள்ளை அவளேதான் பெறவேண்டும்." வைத்தியர்களும் தாதிகளும், உதவலாம். ஆகவே உரிமைகளுக்காகப் போராடும் ஓர் இனம் என்ற வகையில் முதல் பலம் சொந்த பலமாக இருக்க வேண்டும். தெளிவான இலக்கு, கொள்கை, இதனடிப்படையில் ஒன்றுபட்ட உறுதியான மக்கள், மக்களுக்கு தலைமைதாங்கி வழிநடத்தும் ஆற்றல் மிக்க தலைமை- சுருங்கக் கூறின் சுயபலம் என்பது முதல் தேவை. இத்தகைய ஒரு தலைமையினால் தான், தனது இலக்கினை நோக்கி காய்களை நகர்த்த முடியும்.

நன்றி:இணையம்

(தொடரும்)

# கூடங்குள பாதிப்புகள் தொடர்பில் அதிகாரிகள் ஜூலையில் ஆராய்வு

(கொழும்பு)

**கூடங்குளம் அணுவிபத்து பேரிடர் மேலா ண்மை தொடர்பாக இந்திய அணுசக்தி அதி காரிகளை இலங்கை அதிகாரிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 9 முதல் 15 ஆம் திகதிக்குள் புதுடில்லியில் சந்தித்துபேச இருக்கின்றனர்.**

கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அதேபோல் கூடங்குளம் அணு உலையில் விபத்து ஏற்பட்டால் அது இலங்கையையும் பாதிக்கும் என்று அங்குள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

இதையடுத்து இந்தியாவுடன் அணுவிபத்து பேரிடர் மேலாண்மை தொடர்பாக உடன்பாடு செய்து கொள்ள இலங்கை விரும்பியது. இதன் ஒரு பகுதியாகவே இந்திய அதிகாரிகளுடன் இலங்கை அதிகாரிகள் பேச்சு நடத்துகின்றனர்.

புதுடில்லியில் நடக்க இருக்கும் சந்திப்பின் போது இரு நாட்டு அதிகாரிகளும் இருதரப்பு உடன்பாடு தொடர்பாக ஆலோசிப்பார்கள் என இலங்கையின் அணுசக்தி ஆணைய தலைவர் ரஞ்சித் விஜயவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையின் மின்சாரத்துறை அமைச்சராக சம்பிக்க ரணவக்க பொறுப்பேற்றபின் இதற்கான பணிகளை மீண்டும் முடுக்கி விட்டார். இதையடுத்து திருத்தப்பட்ட ஆவணம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த இந்திய அதிகாரிகள் எங்களை சந்திக்க தயாராக இருப்பதாக தெரிவித்தனர். உத்தேசமாக எதிர்வரும் ஜூலை 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிக்குள் இரு நாட்டு அதிகாரிகளும் சந்திக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

கூடங்குளம் அணு உலையில் இருந்து வெளியாகும் கதிரியக்க கழிவுகள் வங்கக் கடலை மாசுபடுத்தும். அதனால் இலங்கையின் கடலோர பகுதிகளில் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என செய்தி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## அந்தோனியார் பெருவிழா

மாதகல் புனித அந்தோனியார் ஆலய பெருவிழா கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று மாலை 5.15 மணிக்கு நற்கருணைப்பெருவிழாவும் நாளை புதன் கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (அ-7)

## கிளிநொச்சி-உருத்திரபுரம் வீதியில்

# நேரத்தை பின்பற்றாத இ.போ.சவும் சிரமத்தை எதிர்கொள்ளும் மக்களும்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம் வீதியினூடாக போக்குவரத்திற்கான பேருந்து சேவைகள் சீரின்மையால் மக்கள் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வீதியினூடாக இலங்கை போக்குவரத்து சபை பேருந்து ஒன்றும் தனியார் சேவை பேருந்து ஒன்றும் போக்கு வரத்து சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

ஆயினும் சில சந்தர்ப்பங்களில் இ.போ.ச. பேருந்து உரிய நேரத்திற்கு பயணிப்பதில்லை. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுவருகின்றனர். இ.போ.ச. பேருந்து உரிய நேரத்திற்கு பயணிக்க தவறும் போது இச்சந்தர்ப்பத்தை தனியார் பேருந்து பயன்படுத்தி சேவையில் ஈடுபடும். இதனால் இ.போ.ச. பேருந்து மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

இவர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் பேருந்து சேவைகள் ஸ்தம்பிதம் அடைவதோடு அவ்வீதியை பயன்படுத்துவோர் சொல்லொணா துன்பத்தை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் தூர இடங்களிலிருந்து இப்பகுதி பாடசாலைகளில் சேவையாற்ற வருகை தரும் ஆசிரியர்கள், ஏனைய அலுவலர்கள் உரிய நேரங்களுக்கு கடமைகளுக்கு சமுகம் அளிக்கும் போது காலதாமதமாவதால் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

மேலும் இவ்வீதி மிகவும் பழுதடைந்துள்ளமையால் இவ்வீதியினூடாக பேருந்துகளில் மட்டுமே பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. எனவே,உரிய அதிகாரிகள் இவற்றினை கருத்திற்கொண்டு போக்குவரத்தினை சீர்செய்ய ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9-254)

# கேட்கக்கூடாத கேள்வியை கேட்ட அமைச்சர் கஜதீர

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களிடம் துப்பாக்கியை கொடுப்பது சரியா? தவறா? என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கேள்வி எழுப்பியிருந்தார்.

போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான நட்டஈடு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்வி புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப்புலிகளின் குடும்பத்தினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

ஆயுதம் ஏந்தியதற்காக கைது செய்யப்பட்டு பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு பயிற்சிகள் அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களை மீண்டும் பழைய நிலைக்கு இட்டுச் செல்வதாக இந்தக் கேள்விகள் அமைந்திருந்தன.

குடும்ப வறுமையை போக்க இலகு கடனுக்காக விண்ணப்பித்து விட்டு காசோலையை பெற வந்தவர்களிடம் அமைச்சர் கஜதீர இவ்வாறு கேள்வி எழுப்பியதோடு துப்பாக்கியை கொடுப்பது சரியென்றால் கைகளை உயர்த்தி சம்மதம் தெரிவியுங்கள் எனவும் கூறியிருந்தார்.

அதற்கு அரங்கில் இருந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் கைகளை உயர்த்தி சம்மதம் தெரிவித்திருந்தனர்.

உதவிகளைப்பெற வந்தவர்கள் என்பதால் கைகளை அவர்கள் உயர்த்தியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இருப்பினும் அமைச்சர் கஜதீரவின் கேள்விதான் ஆச்சரியத்துடன், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

உதவிகளுக்காக ஏங்கித்தவிக்கும் குடும்பங்களை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதை விடுத்து ஆயுதக்கலாசாரத்தை மறந்து சமூகத்துடன் இணைந்து வாழ நினைப்பவர்களின் கைகளில் துப்பாக்கியை கொடுத்து பாதகமான விளைவுகளை அமைச்சர் கஜதீர ஏற்படுத்த முற்படுகின்றார் என பலதரப்பட்டவர்களும் முணுமுணுத்தனர். (அ-6)

# பல்கலை.ஊழியர்களுடனான பேச்சில் சாதகமான தீர்வு எட்டப்படும்

## உயர்கல்வி அமைச்சின் செயலாளர் நம்பிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுடன் இன்று செவ்வாய்க்கிழமை நடத்தப்படவிருக்கும் பேச்சுவார்த்தையில் சாதகமான தீர்வு எட்டப்படுமென நம்புவதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் நவரட்ண தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், பணிப்பகிஷ்கரிப்பை கைவிட்டு விட்டு கல்விசாரா ஊழியர்கள் தமது கடமைக்கு சமுகமளிக்க வேண்டும்.

கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுக்கும் அதிகாரம் உயர்கல்வி அமைச்சுக்கு கிடையாது. பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மத்தியஸ்தராக மட்டுமே செயற்பட முடியும்.

இதேவேளை, தமது கோரிக்கைகளின் படி உரிய சம்பள அதிகரிப்பு அமுல்படுத்தப்படாவிடின் தமது பணிப்பகிஷ்கரிப்பை தொடர்ந்தும் முன்னெடுப்போமென இலங்கை பல்கலைக்கழக லிகிதர்கள் சங்கப் பிரதம செயலாளர் நீல் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர நடைமுறையிலிருக்கும் சுற்றறிக்கைகளை இரத்து செய்த பின்னர் இல.879 சுற்றறிக்கையினை அமுல்படுத்துவது தொடர்பாக உறுதியளித்த போதிலும் இதுவரையில் அது தொடர்பில் எவ்வித சுற்றறிக்கையும் நடைமுறைக்கு வரவில்லை.

தமது கோரிக்கைகளுள் ஒன்றேனும் நிறைவேற்றப்படும் வரை பணிப்பகிஷ்கரிப்பை தொடர்ந்தும் முன்னெடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான மாகாணமட்ட சித்திரப்போட்டிகள் அண்மையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. வவுனியா வடக்கு வலயத்தை சேர்ந்த வ/விஞ்ஞானகுளம் நவரட்ணம் வித்தியாலய மாணவர்களாகிய ப.லதீஷா தரம் 2 இற்கான அச்சுப்பதித்தலில் முதலாம் இடத்தினையும் இ.ஸ்ரீபன் தரம் 3 மாணவர்களுக்கான கொலாச் (ஒட்டு) சித்திரப் போட்டியில் முதலாம் இடத்தினையும் பெற்றள்ளனர்.

# வித்தியா மாலை அணியும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவானின் வித்யா மாலை அணியும் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 6 மணிமுதல் சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு யாழ். மாவட்ட ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கங்களினாலும் தொண்டர்களினாலும் பாடசாலைகள் தோறும் நடத்தப்படவுள்ளன.

எனவே, இதில் யாழ்.மாவட்ட சகல பாடசாலை மாணவர்களையும் கல்வித் துறை சார்ந்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)



# சிறுவர் அரங்கம்

128

## அம்புலி மாமா கதைகள்

# விக்கியை உதைத்த ஜோ



அந்தக் காட்டில் மரங்கள் அடர்ந்த ஒரு பகுதி இருந்தது. அந்தப் பகுதியில் ஒரு முயலும் குரங்கும் வசித்து வந்தன. அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். எப்போதும் இருவரும் அந்தக் காட்டிலே சுற்றித் திரிந்து விளையாடுவார்கள்.

முயலின் பெயர் டிங்கி. குரங்கின் பெயர் ஜோ.

குரங்கு ஜோ தினமும் மரத்தில் ஏறி வகை வகையாக நல்ல பழங்களைப் பறித்து முயல் டிங்கிக்குத் தரும். டிங்கியும் அந்தப் பழங்களைச் சந்தோசமாகச் சாப்பிடும்.

இருவரும் தினமும் ஓடிப்பிடித்து விளையாடுவார்கள். டிங்கிக்காக ஜோ வேண்டுமென்றே மெதுவாக ஓடுவது போல் நடிக்கும். தனது நண்பனின் மனசு வேதனையடையக் கூடாது என்பதற்காக சில சமயங்களில் டிங்கியிடம் வேண்டுமென்றே தோற்றுப் போகும்.

டிங்கியும் ஜோவும் அந்தக் காட்டிலுள்ள நீர் வீழ்ச்சிக்குச் சென்று குளிப்பார்கள். அங்கேயே விளையாடிவிட்டு ஓய்வெடுத்துக் கொள்வார்கள். மாலை நேரமானதும் தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பி வருவார்கள்.

இப்படியே சில நாட்கள் சென்றன.

அன்று இரவு டிங்கி தூங்கப்போனது. சிறிது நேரத்தில் அதற்குத் தூக்கம் வந்து விட்டது. அதற்கு ஒரு கனவு வந்தது.

கனவில் டிங்கியும் ஜோவும் நீர்வீழ்ச்சியில் குளிக்கப்போனார்கள். டிங்கி குளித்துக் கொண்டிருந்த போது ஜோ பின்னாலிருந்து டிங்கியை ஓடிக்கொண்டிருந்த நீரில் தள்ளி விட்டது. டிங்கி கத்திக் கொண்டே நீரில் அடித்துச் சென்றது.

டிங்கி திடுக்கிட்டு எழுந்தது. அப்போது தான் அதற்கு ஜோ தன்னை நீர்வீழ்ச்சி ...ில் தள்ளி விட்டது கனவு என்று புரிந் ... அது விடியற்காலை நேரம். விடியற் ...லையில் காணும் கனவுகள் பலிக் ...ன்று அதனுடைய அம்மா ஒரு ... சொல்லியிருந்தது இப்போது ... ஞாபகம் வந்தது. இதன் ...க டிங்கிக்கு மனத்தில் பயம் ...

...ழுந்ததிலிருந்து டிங்கிக்கு ...ாகவே இருந்தது.

சற்று நேரத்தில் ஒரு நாய் எதிரே வந்தது. அதன் பெயர் ஜில்.

ஜில்லிடம் டிங்கி தான் கண்ட கனவைப் பற்றிச் சொன்னது.

டிங்கியும் ஜோவும் நண்பர்களாக இருப்பது ஜில்லுக்கு எப்போதுமே பிடிக்காது. இருவரையும் எப்படியாவது பிரிக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக நினைத்துக் கொண்டிருந்தது. அதற்கு சரியான சமயம் இப்போது கிடைத்தது.

ஆமா, டிங்கி நீ ஜாக்கிரதையாக இருக்கணும். இனி நீ ஜோ கிட்டே சேராதே. அது உன்னை நீர்வீழ்ச்சியிலே இருந்து நிச்சயம் தள்ளிடும்.

ஜில்லின் பேச்சைக் கேட்டதிலிருந்து டிங்கி கவலையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தது.

அன்று வழக்கம் போல ஜோ வந்தது.

டிங்கி நாம விளையாடப் போகலாமா?

டிங்கி பதில் பேசாமல் நின்று கொண்டிருந்தது.

என்ன டிங்கி எந்தப் பதிலும் சொல்லாம நின்னுகிட்டிருக்கே.

நான் உன்கூட விளையாட வரலை.

ஏன் டிங்கி இது மாதிரி பேசறே?

உன்கூட இனி சேரக் கூடாதுன்னு முடிவு பண்ணியிருக்கேன்.

இதைக் கேட்ட ஜோ அதிர்ச்சி அடைந்தது.

ஏன் டிங்கி என்னெல்லாமோ பேசறே? இன்னைக்கு என்ன ஆச்சு உனக்கு?

உன்கூட விளையாடினா நீ என்னை நீர்வீழ்ச்சியிலே இருந்து தள்ளி விட்டுடுவே. அதனால நான் இனி உன்கூட விளையாடவே மாட்டேன்.

நீ என்ன சொல்றேன்னே எனக்குப் புரியலையே.



டிங்கி தான் கண்ட கனவை ஜோவிடம் சொன்னது.

இதைக் கேட்ட ஜோ விழுந்து விழுந்து சிரித்தது.

நீ என்னோட உயிர் நண்பன். நான் போய் உன்னைத் தண்ணியிலே தள்ளி விடுவேனா? உனக்கு ஆபத்து ஏற்பட்டால் என் உயிரைக் கொடுத்தாவது ஆபத்துலேயிருந்து உன்னைக் காப்பாத்துவேன்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ இனி என்னைப் பார்க்க வராதே. என்னை விளையாட்டுக்குக் கூப்பிடாதே.

ஜோவிற்கு இந்தப் பேச்சைக் கேட்டதும் அழுகையே வந்து விட்டது. இனி டிங்கியிடம் பேசிப்பயனில்லை என்பதை உணர்ந்த ஜோ அங்கிருந்து வருத்தத்துடன் புறப்பட்டுச் சென்றது.

அடுத்த நாளிலிருந்து டிங்கி தனியே விளையாடச் சென்றது. ஜோ இல்லாமல் தனியே விளையாடுவது அதற்கு என்னமோ போல இருந்தது. அந்தப் பக்கமாக ஒரு நரி வந்தது. அதன் பெயர் விக்கி.

என்ன டிங்கி, தனியே விளையாடறே! ஜோ வரலையா?

இல்லை, இனி அது கூட நான் விளையாடறதா இல்லே. அது என்னை நீர்வீழ்ச்சியிலே தள்ளி விடற மாதிரி கனவு கண்டேன். அதனால இனி ஜோ கூட சேரக் கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன்.

இந்த சமயத்தைத் தான் விக்கி எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தது.

நல்லவேளை சரியான முடிவை எடுத்திருக்கே. அந்த ஜோ உன்னைத் தண்ணியிலே தள்ளிவிட்டுடும். நல்ல வேளையா நீ தப்பிச்சுகிட்டே.

விக்கியின் பேச்சு டிங்கிக்கு சந்தோசத்தைத் தந்தது.

விக்கி, வாயேன் நாம விளையாடலாம்.

ஓ அதுக்கென்ன. நாம இப்ப விளையாடலாம். விக்கியும் டிங்கியும் விளையாட ஆரம்பித்தன.

விக்கி தன் மனத்தில் ஒரு திட்டத்தைத் தீட்ட ஆரம்பித்தது.

அடுத்த நாள் விக்கி தன் நண்பர்களை அழைத்தது.

நான் இப்ப உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியை சொல்லப் போறேன். அந்த டிங்கி முயல் இப்ப என் கூட பழக ஆரம்பிச்சிடுச்சு. நாம முயல் கறி சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. முயலை நாம துரத்திப் பிடிக்கிறது ரொம்ப கஷ்ரம். அதனால நான் ஒரு திட்டம் போட்டிருக்கேன்.

நாம் எல்லாரும் சேர்ந்து ஒரு பெரிய பள்ளம் தோண்டலாம். அது மேல இலைகளைப் போட்டு மூடி மறைச்சிடலாம். நான் அந்த டிங்கியை ஏமாத்தி அதையும் அதோட நண்பர்களையும் நாளைக்கு காலையிலே இங்கே கூட்டிக்கிட்டு வர்றேன். நாம எல்லாரும் ஒண்ணா சேர்ந்து அதுங்களைப் பள்ளத்தில தள்ளிடலாம். எப்படி என் ஐடியா?

பிரமாதம் உன் மூளை யாருக்கு வரும்?

விக்கியை நண்பர்கள் பாராட்டினர்.

விக்கி தன் நான்கு நண்பர்களுடன் சேர்ந்து அந்த இடத்தில் ஒரு பள்ளம் தோண்டி அதைக் கிளைகளைப் போட்டு மூடியது.

அடுத்த நாள் விக்கி டிங்கியைத் தேடிச் சென்றது.

விக்கியை டிங்கி வரவேற்றது.

வா விக்கி, உன்னைத் தான் எதிர்பார்த்துக் காத்துக்கிட்டிருந்தேன். நாம விளையாடலாமா?


ஓ, என்கிட்ட ஒரு புதுப் பந்து இருக்கு. அந்தப் பந்தோட என்னோட நண்பர்கள் காத்துக்கிட்டிருக்காங்க. நீ உன் நண்பர்களை அழைச்சுக்கிட்டு வாயேன். ஒண்ணா சேர்ந்து ஜாலியா விளையாடலாம்.

பந்து விளையாட்டு என்றதும் டிங்கி தன் நண்பர்களைக் கூப்பிட்டது. எல்லாரும் விளையாட வர சம்மதித்தார்கள்.

அனைவரும் புறப்பட்டார்கள்.

அந்தப் பள்ளம் வந்ததும் விக்கி தன் நண்பர்களைக் கூப்பிட்டது. தங்களுக்கு நேர இருக்கும் ஆபத்தை அறியாத டிங்கியும் அதன் நண்பர்களும் பந்து விளையாட்டை நினைத்து மகிழ்ச்சியாகக் குதித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த சமயத்தில் எதிர்பாராத அந்த நிகழ்ச்சி நடந்தது. அந்தப் பகுதியில் இருந்த மரத்தின் மேலிருந்த் ஜோவும் அதன் நண்பர்களும் கீழே குதித்து விக்கியையும் அதன் நண்பர்களையும் நன்றாக உதைக்க ஆரம்பித்தனர்.



இதை. எதிர்பார்க்காத விக்கியும் அதன் நண்பர்களும் விட்டால் போதுமென்று தலை தெறிக்க ஓடி மறைந்தனர். இதைப் பார்த்த டிங்கிக்கு ஆத்திரம் உண்டானது. அது ஜோவைப் பார்த்து கோபத்துடன் பேசியது.

எதுக்காக என்னோட நண்பர்களைத் துரத்தினே? நான் உன்கூட விளையாடாம அதுங்க கூட விளையாடறது உனக்குப் பிடிக்கலையா?

என்னை நீ தப்பா புரிஞ்சிக்கிட்டே டிங்கி. நேத்து நான் இந்தப் பக்கமா வந்துகிட்டிருந்தேன். அப்ப இந்த விக்கி அதோட் நண்பர்களோட உன் பெயரைச் சொல்லி பேசிக்கிட்டிருந்தது என் காதுல விழுந்துச்சு.

அது ஒரு பள்ளத்தைத் தோண்டி உன்னையும் உன் நண்பர்களையும் அதுல தள்ளி அப்புறம் சாப்பிடனும்னு திட்டம் தீட்டிக்கிட்டிருந்திச்சு.

உன்னைக் காப்பாத்தறதுக்காகத் தான் நான் என்னோட நண்பர்களை அழைச்சுகிட்டு வந்து இங்க காத்துகிட்டிருந்தேன்.

இதோ பாரு விக்கி, உன்னையும் உன் நண்பர்களையும் தள்ளுவதற்கு தோண்டி வெச்சிருந்த பள்ளம்.

ஜோ அந்தக் கிளைகளை இழுத்துப் போட்டு விக்கி தோண்டி வைத்திருந்த பள்ளத்தைக் காட்டியது.

டிங்கிக்கு இப்போது உண்மை புரிந்தது. ஜோவின் உண்மையான அன்பு டிங்கிக்குப் புரிந்தது.

டிங்கி தன் உயிரைக் காப்பாற்றிய ஜோவிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டது. ஜோவும் டிங்கியை மன்னித்தது. இப்போது இருவரும் மீண்டும் நண்பர்களாகிவிட்டார்கள்.

# வெளிநாட்டு வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ள இந்தியர்களின் பணம் கறுப்புப்பணம் அல்ல;

## நிதி மந்திரி முகர்ஜி எடுத்துரைப்பு

(கொல்கத்தா)

வெளிநாட்டு வங்கிகளில் உள்ள இந்தியர்களின் பணம் எல்லாம் கறுப்பு பணம் அல்ல என்று மத்திய நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.



மத்திய நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் மேற்கு வங்காள மாநிலம் கார்கிராமில் காங்கிரஸ் செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். அதில் அவர் உரையாற்றுகையில்,

வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் வைத்துள்ள கறுப்பு பணத்தை மீட்டு இந்தியாவுக்கு கொண்டு வர வேண்டும் என்று பரவலாக குரல் எழுப்பப்பட்டு வருகின்றது. வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் வைத்துள்ள பணம் எல்லாமே கறுப்பு பணம் அல்ல.

அவை தொழில் அதிபர்கள் அல்லது வர்த்தக நிறுவனங்களால் போடப்பட்டு இருக்கலாம். எவ்வளவு பணம் என்பதை துல்லியமாக அறிவதற்கு சிறிது காலம் ஆகலாம். வெளிநாட்டு வங்கிகளில் உள்ள கறுப்பு பண விபரங்களை அறிய 37 நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

சிரியா, லிபியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட புரட்சி காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் உரத்தின் விலை அதிகரித்து விட்டது. இந்த நாடுகளில் இருந்து பொட்டாசியம் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. தற்போது அதை நிறுத்திவிட்டோம்.

பெற்றோலிய பொருட்களுக்கும் உணவு பொருட்களுக்கும் மத்திய அரசு அதிகமாக மானியம் அளித்து வருகிறது. எனவே மாநிலங்களுக்கு கூடுதல் நிதி உதவி செய்ய முடியாத அளவுக்கு எங்கள் கைகள் கட்டப்பட்டுள்ளன.

சமூக, பொருளாதார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த திசையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

ஆனால் கூட்டணி கட்சிகளை சார்ந்த நாங்கள் செயற்பட வேண்டி இருப்பதாலும் கூட்டணி கட்சிகள் கருத்து வேறுபாடு கொண்டிருப்பதாலும் சமூக, பொருளாதார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் தாமதம் ஏற்படுகிறது என பிரணாப் முகர்ஜி பேசினார்.

இந்த கூட்டத்தில் பிரணாப் முகர்ஜி முன்னிலையில் காங்கிரஸ் எம்.பி.ஆதிர் சவுத்ரி பரபரப்பான தகவலை வெளியிட்டார். பிரணாப் முகர்ஜி அடுத்த தடவை மேற்கு வங்காளத்துக்கு வரும்போது நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால் பிரணாப் முகர்ஜி ஜனாதிபதி தேர்தல் குறித்து எதுவும் பேசவில்லை. டில்லியில் முக்கிய கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டி இருப்பதால் பயணத்தை பாதியில் முடித்து கொண்டு டில்லி செல்வதாக அவர் கூறினார். (அ-2)

# கிருஷ்ணா-ஹினா ரப்பானி சந்திப்பு; இருநாட்டு முன்னேற்றம் குறித்து ஆய்வு



இந்தியவெளியுறவுத்துறைஅமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா எதிர் வரும் ஜூலைமாதம் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் செல்லும் போது அந்நாட்டுவெளியுறவுத்துறைஅமைச்சர் ஹினா ரப்பானியை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அப்போது இரு நாடுகளுக்கிடையே நடந்துவரும் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் மறு ஆய்வு செய்வார்கள். ஜூலை 17, 18 ஆம் திகதிகளில் இஸ்லாமா பாத்தில் கிருஷ்ணா இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


அப்போது ஹினாவுடன் அவர் விரிவாக பேச்சு நடத்துவார். இரு அமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன் இருநாட்டு வெளியுறவுத்துறை செயலர்களும் பேச்சுவார்த்தை மேற்கொள்வர். இதனை அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு திருப்திகரமாக இருப்பதாகவும் இரு தரப்புக்கும் இடையிலான நம்பிக்கையில் சிறு சிறு பிரச்சினைகள் உள்ளதாகவும் இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் ஷாகித் மாலிக் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மீண்டும் பின்னடைவை சந்திக்காத நிலையில் அமைதிப் பேச்சுவார்த்தையை கொண்டுசெல்லவேண்டும் என்று மாலிக் கூறியுள்ளார்,


2008ஆம் ஆண்டு நவம்பரில் மும்மை தாக்குதல் நடந்த பின்னர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பேச்சுவார்த்தையில் தொய்வு ஏற்பட்டது. பல அம்சம் குறித்து பேச்சுவார்த்தை எனும் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இவை தவிர இரு நாடுகளுக்கும் அக்கறையுள்ள பல்வேறு விடயங்களை குறித்தும் விவாதிக்கப்படும் என வெளியுறவுத் துறை வட்டாரங்களும் தெரிவித்தன. (அ-2)




கராச்சியில் நடைபெற்ற ஜமாத் இ இஸ்லாமி கட்சியின் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அமெரிக்காவுக்கு எதிராக கோஷம் எழுப்புவதைப் படத்தில் காணலாம்.

# 88 ஆண்டுகள் பாதுகாக்கப்பட்ட நிலையில் லெனினின் உடலை அடக்கம் செய்ய முடிவு



சோவியத் யூனியனை நிர்மாணித்தவரான மாபெரும் கம்யூனிசத் தலைவர் லெனினின் உடல் அவர் இறந்து 88 ஆண்டுகளுக்குப் பின் அடக்கம் செய்யப்படவுள்ளது.

மொஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் லெனின் உடல் பதப்படுத்தப்பட்ட நிலையில் கடந்த 88 ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் ஏராளமான மக்கள் இந்த உடலைப் பார்த்துள்ளனர். சோவியத் யூனியன் சிதறுண்டு போன பின்னரும்கூட லெனின் உடல் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது லெனின் உடலை அடக்கம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1924ஆம் ஆண்டு 53 வயதில் லெனின் மரணமடைந்தார். அவரது உடலை இத்தனை காலமாக அடக்கம் செய்யாமல் வைத்திருப்பது அபத்தமானது என்று ரஷ்ய கலாசார அமைச்சர் விளாடிமிர் மெடின்ஸ்கி கூறியுள்ளார். இவர் ஜனாதிபதி புடினுக்கு மிகவும் நெருக்கமானவர்.

தனது உடலை மிகச் சாதாரணமான முறையில் அடக்கம் செய்யவேண்டும் என்பதே லெனினின் கடைசி ஆசை. அதைக்கூட இதுவரை நிறைவேற்றாமல் இருப்பது தவறானது. அவரது விருப்பப்படி சாதாரண கல்லறையில் அவரது உடல் அடக்கம் செய்யப்படும்.

மிகவும் மரியாதைக்குரிய இடத்தில் மரியாதையான கௌரவமான முறையில் அவரது உடல் அடக்கம் செய்யப்படும். தற்போது லெனின் உடல் அடங்கியுள்ள நினைவிடம் சோவியத் வரலாற்று நினைவிடமாக மாற்றப்படும் என்றார்.

லெனினின் தாயார் செயின்ட் பீட்டர்ஸ்பேர்க்கில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது கல்லறைக்கு அருகிலேயே லெனின் உடலும் அடக்கம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# குடியிருப்பு மீது குண்டு வீச்சு நடத்தக் கூடாது; நேட்டோ தளபதியிடம் ஹர்சாய் வலியுறுத்து

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படை நடத்திய தாக்குதலில் 18 அப்பாவிகள் பலியானதால் குடியிருப்பு பகுதியில் இனி விமானம் மூலம் குண்டு வீச்சு நடத்தக்கூடாது என்று ஜனாதிபதி ஹமித் ஹர்சாய் வலியுறுத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள லோகார் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு தீவிர வாதிகளை வேட்டையாடும் பணியில் ஈடுபட்ட நேட்டோ படையினர் குண்டு வீச்சு நடத்தினார்கள். இதில் 9 குழந்தைகள், 5 பெண்கள், 3 முதியவர்கள் உட்பட 18 பேர் உயிரிழந்தனர். இதற்கு ஆப்கானிஸ்தான் மக்களிடம் கடும் எதிர்ப்பு எழுந்தது.

இதனால் நேட்டோ படைத்தளபதி ஜான்ஆல்லின்வருத்தம்தெரிவித்ததுடன் இச்சம்பவம்பற்றி விசாரணை நடைபெறும் என்றும் கூறினார்.



இது தொடர்பாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமித் ஹர்சாய் நேற்று முன்தினம் நேட்டோ தளபதி ஜான் ஆல்லின் மற்றும் அமெரிக்க தூதர் ராயன் ரோக்கர் ஆகியோருடன் முக்கிய ஆலோசனை நடத்தினார். அப்போது ஹர்சாய் நேட்டோ தளபதியிடம் இந்தக் குண்டு வீச்சு சம்பவம் இருநாடுகள் ஒப்பந்தங்களை மீறும் செயல். இதனால் நல்லுறவு பாதிக்கும் என்று கூறினார்.

இனிமேல் குடியிருப்பு பகுதியில் குண்டு வீச்சு நடத்தக்கூடாது என இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதுபற்றி ஜனாதிபதி மாளிகை சார்பில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் குண்டு வீச்சு சம்பவத்தில் அப்பாவிகள் பலியானதற்கு நேட்டோ தளபதி மீண்டும் வருத்தம் தெரிவித்தார். இனி குடியிருப்பு பகுதிகளில் விமானம்மூலம் குண்டு வீச்சு நடத்த மாட்டோம் என உறுதி அளித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படைகள் 2014 ஆண்டில் முழுமையாக வாபஸ் பெற இருக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் வட க்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தலிபான்கள் ஆதிக்கம் இருப்பதாகவும் இவர்களை ஒடுக்குவதில் சில நேரங்களில் பிரச்சினை ஏற்படுவதாகவும் நேட்டோ இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ-2)

# வடமாகாணமட்ட போட்டிகளுக்கு தெரிவாகிய கிளி.மாவட்ட பெருவிளையாட்டுப்போட்டி முடிவுகள்

(சிவநகர்)

வடமாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ள கிளிநொச்சி மாவட்ட பெரு விளையாட்டுப் போட்டி முடிபுகளை கிளி/மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் வெளியிட்டுள்ளார்.

அப் போட்டிகளில் ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வரு மாறு,

**ஆண்கள் பிரிவு.**

**எல்லே**

**19 வயதுப்பிரிவு**

கிளி/அக்கராயன் ம.வி., கிளி/பூநகரி ம.வி., கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

**கபடி**

**15 வயதுப்பிரிவு**

கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா., கிளி/சிவநகர் அ.த.க.பா., கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா.

**19 வயதுப்பிரிவு**

கிளி/இராமநாதபுரம் ம.வி., கிளி/சிவநகர் அ.த.க.பா., கிளி/பூநகரி ம.வி.

**காற்பந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு**

கிளி/நாச்சிக்குடா அ.த.க.பா., கிளி/பரந்தன் இந்து ம.வி., கிளி/வட்டக்கச்சி ம.வி.

**17 வயதுப்பிரிவு**

கிளி/முழங்காவில் ம.வி., கிளி/நாச்சிக்குடா அ.த.க.பா., கிளி/பிரமந்தனாறு ம.வி.

**19 வயதுப்பிரிவு**

கிளி/உருத்திரபுரம் ம.வி., கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளி/முழங்காவில் ம.வி.

**கரப்பந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு**

கிளி/இராமநாதபுரம் தெற்கு அ.த.க.பா., கிளி/பாரதி வித்தியாலயம், கிளி/பளை றோ.க.த.க.பா.

**17 வயதுப்பிரிவு**

கிளி/விவேகானந்தா வித்தி, கிளி/பாரதி வித்தி., கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த க.பா.

**19 வயதுப்பிரிவு**

கிளி/வட்டக்கச்சி ம.வி., கிளி/கனகபுரம் ம.வி., கிளி/தர்மபுரம் ம.வி.

**கூடைப்பந்து**

**19 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி ம.வி.

**மென்பந்து துடுப்பாட்டம்**

**19 வயதுப்பிரிவு**

கிளி/அக்கராயன் ம.வி., கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளி/பூநகரி ம.வி.

**மேசைப்பந்து**

**15 வயதுப்பிரிவு**

கிளி/கனகபுரம் ம.வி., கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

**19 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி ம.வி., கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளி/கனகபுரம் ம.வி.

**சதுரங்கம்**

**15 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி ம.வி., கிளி/முருகானந்தா கல்லூரி, கிளி/வட்டக்கச்சி ம.வி.

**19 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி ம.வி., கிளி/வட்டக்கச்சி ம.வி., கிளி/இராமநாதபுரம் ம.வி.

**பூப்பந்து**

**15 வயதுப்பிரிவு**

கிளி/கனகபுரம் ம.வி., கிளி/கிளிநொச்சி ம.வி., கிளி/அக்கராயன் ம.வி.

**19 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளி/கனகபுரம் ம.வி., கிளி/கிளிநொச்சி ம.வி.

**கரம்**

**15 வயதுப்பிரிவு**

கிளி/கனகபுரம் ம.வி., கிளி/வட்டக்கச்சி ம.வி., கிளி/முருகானந்தா கல்லூரி

**19 வயதுப்பிரிவு**

கிளி/பூநகரி ம.வி., கிளி/கனகபுரம் ம.வி., கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

**உடற்பயிற்சி**

**19 வயதுப்பிரிவு**

கிளி/விவேகானந்தா வித்தி, கிளி/தர்மபுரம் ம.வி., கிளி/முழங்காவில் ம.வி.

**கராத்தே (தனி)**

**15 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளி/கிளிநொச்சி ம.வி., கிளி/கிளிநொச்சி ம.வி.

**17 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி

**19 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளி/கிளிநொச்சி மத்தியகல்லூரி, கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி

**கராத்தே**

**15 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி ம.வி., கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளி/கிளிநொச்சி ம.வி.

**17 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

**19 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

**கராத்தே(குழு)**

**15 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி ம.வி., கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

**17 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி

**19 வயதுப்பிரிவு**

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**பெண்கள் பிரிவு**

**எல்லே**

**19 வயதுப்பிரிவு**

கிளி/பரந்தன் இந்து ம.வி., கிளி/ஜெயபுரம் ம.வி., கிளி/சிவநகர் அ.த.க.பா.

**கபடி**

**15 வயதுப்பிரிவு**

கிளி/ பூநகரி ம.வி., கிளி/உருத்திரபுரம் ம.வி., கிளி/சிவநகர் அ.த.க.பா.

**19 வயதுப்பிரிவு**

கிளி/சிவநகர் அ.த.க.பா., கிளி/பூநகரி ம.வி., கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா.

**வலைப்பந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு**

கிளி/அக்கராயன் ம.வி., கிளி/இராமநாதபுரம் ம.வி., கிளி/முருகானந்தாக் கல்லூரி

**17 வயதுப்பிரிவு**

கிளி/சென்.திரேசா மகளிர் கல்லூரி, கிளி/அக்கராயன் ம.வி., கிளி/வட்டக்கச்சி ம.வி.

**19 வயதுப்பிரிவு**

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா., கிளி/முருகானந்தாக்கல்லூரி, கிளி/வட்டக்கச்சி ம.வி. (அ-7-254)

(தொடரும்)

# நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்

## முல்லை.அரச அதிபர் தெரிவிப்பு

(மல்லாவி)



முல்லை.மாவட்டத்தில் பட்டதாரிகள் நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சைகள் நேற்று திங்கட்கிழமையும் இன்று செவ்வாய்க்கிழமையும் முல்லை. மாவட்ட செயலகத்தில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாக முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு கடந்த 2009.12.31 இற்கு முன் பட்டம் பெற்ற முல்லை. மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தோற்ற முடியும். இதுவரை 163 விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் இதுவரை விண்ணப்பிக்க தவறிய விண் ணப்பதாரிகள் மேற்கூறப்பட்ட தகைமைகளை உடையவர்கள் இன்றைய தினம் சகல ஆவணங்களுடனும் சமுகம் தரும்படியும் அவர் கேட்டுள்ளார்.அத்துடன் நேர்முக தேர்வில் பங்குபற்றும் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இது விடயமாக பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தனக்கு நேரடியாக அறிவித்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-3-15)

# புலிகள் ஒன்றிணைகின்றனர் என்ற கருத்து முழுப்பொய்


(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பில் மீதமுள்ள உறுப்பினர்கள் மீண்டும் ஒன்றிணைந்து வருகின்றனர் என்ற கருத்து புலம்பெயர் தமிழர்களில் உள்ள சில குழுக்களின் பிரசார வேலைத்திட்டத்தின் ஒரு பகுதி மாத்திரமே என குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களில் உள்ள குழுக்களுக்கு தமிழ் மக்கள் குறித்து உண்மையான அக்கறையிருந்திருந்தால் அவர்கள் நாட்டை விட்டு செல்லாதிருந்திருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

விநாயகம் மற்றும் நெடியவன் போன்றவர்கள் போரின் பல கட்டங்களின் போது நாட்டில் இருந்து தப்பிச் சென்றதாகவும் அவர்கள் தற்போது வெளிநாடுகளில் உள்ள அப்பாவி தமிழர்களை தவறாக வழிநடத்தி வருகின்றனர் எனவும் குமரன் பத்மநாதன் கூறியுள்ளதாக கொழும்பை தளமாக கொண்டு இயங்கும் அரசசார்பு இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(அ-2)







யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் உரையாற்றுவதையும் மாணவர்களின் நடன நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

ஏற்றப்படும் விளக்கு இருளை நீக்குகிறது. செய்யப்படும் ஒவ்வொரு நற்செயலும் முன்னேற்றத்தைத் தருகிறது. – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சாராயச் சந்திகள் திருந்த யார் வருவார் இறைவா?

அந்தக்காலத்தில... ... இப்படி எங்கள் முதியவர்கள் ஆரம்பித்த தொடக்கவுரையின் அர்த்தங்களை இப்போதுதான் உணர முடிகின்றது.

அந்தக் காலம் என்று இப்போது முதியவர்கள் மட்டுமல்ல; முப்பது வயது கடந்தவர்கள் கூட அந்தக் காலம் என்று சொல்லும் உரிமைக்குரியவர்கள் என்று கூறலாம்.

இதைக் கூறும்போது முப்பது வயதில் இருக்கக் கூடிய ஒருவர் எப்படி அந்தக் காலம் என்று கூறமுடியும் என யாரேனும் கேட்கலாம். அவ்வாறான ஒரு கேள்வியில்தான் நாம் இழந்தவை, பறிகொடுத்தவை, எங்கள் இளம் சமூகம் அதிரடியாக ஒரு புதிய கோலத்தைப் பூண்டமை என அத்தனையும் அடங்கிக் கொள்ளும்.

சுருங்கக்கூறின், கடந்த பத்து ஆண்டுகளுக்குள் எங்கள் சமூகம் எப்படியான கலாசாரச் சீர்குலைவை எதிர்கொண்டு வருகின்றது என்பதை ஒருகணம் சிந்திக்கும்போது, முப்பது வயதுடைய ஒருவரும் அந்தக்காலம் என்று உச்சரிக்கும் தகைமையைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

இன்று நாம் கலாசாரச் சீரழிவு என்று பேசிக் கொள்வது என்பது தானாக ஏற்பட்டதல்ல.

எங்கள் முதியவர்களின் பொறுப்பற்ற தன்மைகளும் இளம் சமூகத்தை வழிப்படுத்தத் தவறியமையும் கலாசாரப் பிறழ்வுக்கு உரமிட்டன. முன்பெல்லாம் ஒரு பகுதி இளைஞர்கள் நாடகத்தில் ஊறித் திளைப்பர். இன்னொரு பகுதி தங்கள் கிராமத்தின் எழுச்சி பற்றிச் சிந்திப்பர். மற்றொரு பகுதி ஆலயப் பணி, விரத அனுஷ்டானம் என்று ஆன்மிகத்தில் இலயித்திருப்பர்.

இப்படியே இளைஞர்களை வரிசைப்படுத்த; விளையாட்டில், விவசாயத்தில், கடற்றொழிலில், இதர வர்த்தக முயற்சியில் இளைஞர் அணிகள் இருக்க, அவை அத்தனையும் அரசியல் தொடர்பிலும் கட்சி சார்ந்து அரசியலை சல்லடைபோட்டு சல்லாபிப்பர்.

ஆலயத் திருவிழா என்றால் ஊர்கூடி அரங்கேற்றும் நாடகத்திற்குக் குறைவில்லை.

வில்லிசை, மெல்லிசை, மேளதாள இசை, காத்தவராயன் கூத்து அடேங்கப்பா! அத்தனை நிகழ்ச்சிகளும் ஆலயத்தின் புனிதம் குலையாமல்–அரோகரா என்று கூறியதன் அர்த்தம் சிதையாமல் நடந்தேறும்.

ஆனால், இன்று ஊர்கூடி நடிக்கும் நாடகம் இல்லை. இளைஞர்கள் சேர்ந்து நடத்தும் பட்டிமன்றம் இல்லை. கவியரங்கம் இல்லை. ஹாசியம் இல்லை. கலகலப்பில்லை. எல்லாம் தொலைக்காட்சிப் பெட்டிக்கு தாரைவார்த்துக் கொடுத்திவிட்டு தொடர் நாடகத்தில் நாங்களும் பாத்திரமேற்றவர்களாய் அழுது வடிக்கின்றோம்.

கடவுளே! பியரும் போதைப்பொருளும் ஆபாசப் படங்களும் சாராயச் சந்திகளும் மலிந்த எங்கள் மண்ணை மீட்க யார் வருவார்?

அந்தக்காலம் திரும்பவும் வராவிட்டாலும் இந்தக்காலம் திருந்த ஏதேனும் வழி உண்டா இறைவா?

## இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா


(துனங்கிளப்பு)

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய விளையாட்டுமைதானத்தில் தலைவர் எஸ்.ரி விமலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன், சிறப்பு விருந்தினர்களாக தேசிய இளைஞர்கள் சேவை மன்ற யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா, தென்மராட்சி மாவட்ட உதவிப்பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-37)

## குருதிக் கொடையாளர்களே உங்கள் உன்னத தியாகத்தை மதிக்கின்றோம்

**இரத்ததானம் பாதுகாப்பானது**



- இரத்ததானத்தின் முன் இரத்தம் வழங்குவதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு இருக்கின்றதா என்பது கேட்டு அறியப்படும்.
- பின்னர் நாடித்துடிப்பு, குருதி அமுக்கம் போன்ற முக்கியமான சோதனைகள் செய்யப்படும்.
- குருதிக்கொடையாளர்களின் உடல் நிறையும் குருதிச் செறிவும் அளக்கப்படும்.
- உணவு, நீராகாரம் உட்கொண்ட விபரம் கேட்டு உறுதி செய்யப்படும்.
- குருதி வழங்கலின் பின்னர் நீராகாரமும் வழங்கப்படும். சற்றுநேரம் ஓய்வாக இருக்கவேண்டும்.
- குருதி வழங்கலின் பின்னர் கடைப்பிடிக்கவேண்டியவை சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

**குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா**
**காலம்: 2012, ஜீன் 16, சனிக்கிழமை காலை 9.00 மணி**
**இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்**

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 3063

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பட்டதாரிகளை உள்வாங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. வலியுறுத்து

இலங்கை அரச சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான நேர்முகத்தேர்வு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அரசியல் தலையீட்டினால் நிகழ்ந்துள்ள நீதியற்ற நேர்முகத்தேர்வு மற்றும் ஆட்சேர்ப்புக்கள் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டு போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச பட்டதாரிகளை உள்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என வன்னி மாவட்ப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடகாலமாக இடம் பெற்ற போர் நடவடிக்கைகளால் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து மண்ணெண்ணெய் விளக்கிலும் இருளிலும் பயங்கரக்குண்டுச் சத்தத்திலும் இடம்பெயர்ந்தும் உறவுகளை இழந்த நிலையிலும் தமது கல்வியைக் கற்று வந்த எமது மாணவச் செல்வங்களின் பல்கலைக்கழக கல்வியின் பின்னரான வேலைவாய்ப்புக்களில் மேற்கொள்ளப்படும் இத்தகைய குளறுபடிகளை உடன் நிறுத்தவேண்டும். தேவையற்ற அரசியல் தலையீடுகளை மனித நாகரிகத்திற்குப் புறம்பான அணுகுமுறைகளும் விலக்கப்படவேண்டும்.

ஜூன் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் முல்லைத்தீவு அரச அதிபரால் நேர்முகத் தேர்வுக்குப் பட்டதாரிகள் அழைக்கப்பட்டிருந்த நிலையில் வேலைவாய்ப்புத் தேர்வு ஒழுங்குமுறைக்கு மாறாக இம்மாவட்ட அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறையானது அரசின் மீதே ஐயம் கொள்ள வைக்கின்றது.

இம்மாவட்டத்தின் வேலைவாய்ப்பில் இன விகிதாசாரமோ வயது மூப்போ முன்னிலைப்படுத்தப்படாமல் பல்வேறு தெரிவுகள் இவ்வமைச்சரால் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர் யுவதிகள் வாழ்க்கையைத் தொலைத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒருவேலைத் தேர்வில் தமிழ் இளைஞர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையிலேயே கண்துடைப்பிற்காக உள்வாங்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் அமைச்சரால் தற்போது முறைகேடாகத் தெரிவு செய்யப்பட்ட 59 பட்டதாரிகளின் நேர்முகத்தேர்வு நீக்கப்பட்டு பொதுநிர்வாகச் சேவையின் ஒழுங்கு விதிக்கமைவாக ஏற்கெனவே திட்டமிடப்பட்ட நேர்முகத்தேர்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் வவுனியா மாவட்ட பட்டதாரிகளுக்கும் உரிய நேர்முகத்தேர்வுகள் உரிய காலத்துக்குள் முன்னெடுக்கப்படவும் அரசியல் தலையீடுகள் நீக்கப்படவும் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்திற்கு நீதிவான் திருமதி க. ஜீவராணி நியமனம்

யாழ். மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவின் வேண்டுகோளுக்கமைய யாழ் சிறுவர் நீதிமன்றின் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் சிறுவர் நீதிமன்ற நீதிவான் திருமதி க. ஜீவராணி நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறுவர் நீதிமன்றம் தொடர்ச்சியாக ஐந்து நாட்களும் நடைபெற வேண்டுமெனவும் அதற்குப் பெண் நீதிபதி ஒருவரே பொருத்தமானவர் என நீதிச் சேவை ஆணைக்குழுவுக்குத் தெரிவித்ததை அடுத்து மல்லாகம் மேலதிக நீதிவானாகவும், மேலதிக மாவட்ட நீதிபதியாகவும் பணியாற்றும் திருமதி க. ஜீவராணியை நீதிச் சேவை ஆணைக்குழு நியமித்துள்ளது.

சமுதாய சீர்திருத்தப்பிரிவும், யாழ் நீதிமன்றில் ஆரம்பித்ததைத் தொடர்ந்து நீண்ட காலமாக தண்டப் பணம் செலுத்த முடியாமல் சிறையில் வாடும் கைதிகளை சமுதாய சீர்திருத்தத்துக்கு முற்படுத்துவதற்கு நீதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் மூலம் கைதிகள் திருந்தி வாழவும் சிறைச்சாலைகளில் இட நெருக்கடி குறையவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சிறுவர் நீதிமன்ற செயற்பாடுகளுக்கும் சமுதாய சீர்திருத்தப் பிரிவும் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்ததையடுத்து சமூக ஆர்வலர்கள் கல்விமான்களின் கோரிக்கைக்கு அமைவாக இவ்வாறான புனர்வாழ்வு நிலையம் ஒன்றையும் ஆரம்பிப்பதற்கு யாழ் மாவட்ட நீதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும் யாழ்.முஸ்லிம்களின் விவாகரத்து சம்பந்தமான பிரச்சினைகளை யாழிலேயே தீர்வு காணும் பொருட்டு யாழ் முஸ்லிம்களின் வேண்டுகோளை அடுத்து யாழில் காதி நீதிமன்றம் ஒன்றை உருவாக்கவும் நீதியமைச்சுக்கு யாழ் நீதிவான் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஏற்கெனவே முஸ்லிம் பகுதிகளில் முஸ்லிம் சிவில் பாதுகாப்புக் குழு யாழ் நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜாவினால் அங்குராட்பணம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உலகத்தைக் காலடியில் வைக்க



பிறருடைய தவறைக் காண முயற்சிக்காமல் உங்களுடைய தவறைத் திருத்திக் கொள்ளுங்கள்.

பொறாமை, ஆணவம் ஆகியவற்றைத் தூக்கி எறிந்து விட்டு உன் முழு வலிமையுடனும் அளவற்ற ஆர்வத்துடனும் தொழிற்களத்தில் இறங்கினால் இறைவன் நல்வழி காட்டுவான்.

தெளிந்த உண்மையும் கருத்துத் தூய்மையும் மனிதனுக்கு உறுதியான வெற்றியைத்தரும்.

ஒவ்வொரு உயிரிலும் தெய்வத் தன்மை இருக்கிறது. உள்ளேயும் வெளியேயும் இருக்கும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி உள்ளத்தில் குடிகொண்டுள்ள தெய்வத் தன்மையை மலரச் செய்வதுதான் ஒருவருக்கு இலட்சியமாக இருக்கவேண்டும்.

அனைத்தையும் பொறுப்பவளாக இருக்கும் பூமிதேவியைப் போன்று நீங்களும் பொறுமையுடன் இருந்தால் உலகமே உங்கள் காலடியில் அமரும்.

நம்பிக்கை உன்னிடம் நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை. இது வெற்றி பெறுவதன் இரகசியம்.

துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்வதன்மூலம் தெய்வீக இயல்பு நம்மிடம் வெளிப்படும்.

# குழந்தைக்காகத் தொடரைத் துறந்தார் மைக்கல் ஹசி




இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய அணி தயராகிவரும் நிலையில் அத்தொடரில் அவுஸ்திரேலிய அணியின் முக்கிய துடுப்பாட்ட வீரரான மைக்கல் ஹசி பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக பீற்றர் பொறஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் பயணம் மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய அணிஅங்கு அயர்லாந்து அணியுடன் ஒரு ஒருநாள் சர்வதேசப் போட்டியிலும் இங்கிலாந்து அணியுடன் 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளது. இத்தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள பயிற்சிப் போட்டியுடன் ஆரம்பிக்கவுள்ளது.

இத்தொடரில் பங்குபற்றுவதற்கான அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவுஸ்திரேலிய அணி எதிர்வரும் 14ஆம் திகதி அவுஸ்திரேலியாவிலிருந்து புறப்பட்டுச்செல்லவுள்ளது. இந்நிலையிலேயே தனது குழந்தை பிறப்பின்போது குடும்பத்துடன் இருக்க விரும்புவதன் காரணமாகவே மைக்கல் ஹசி இத்தொடரில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எங்களது குழந்தை எதிர்பார்ப்பைவிட 3 மாதங்கள் முன்னதாகவே பிறக்கவுள்ள நிலையில் அந்தச் சந்தர்ப்பத்தில் குடும்பத்தோடு இருக்க விரும்புகிறேன். அதன்காரணமாக இத்தொடரைத் தவறவிட வேண்டியுள்ளேன் என்று தெரிவித்த மைக்கல் ஹசி அவுஸ்திரேலியத் தொடரொன்றைத் தவறவிடுவது என்பது கடினமானது எனவும் தனது நிலையைப்புரிந்து கொண்டு தனக்கான விடுப்பை அளித்த அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

# பேராதனை வெற்றி

பேராசிரியர் துரைச்சாமி ஞாபகார்த்த வருடாந்த பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஆறு ஓவர்கள் கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இம்முறை பேராதனை பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.





இப்போட்டியிலே மொரட்டுவப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியன பங்கு கொண்டன.

இப்போட்டியிலே மொரட்டுவ பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் என்பன இறுதிப் போட்டியில் பங்கு பற்றின.

இப்போட்டியிலே தொடர்ந்து எட்டாவது முறையாக பேராதனைப் பல்கலைக்ககழகம் சம்பியன் பட்டம் வென்றது.

# ஊவா வெல்ஸ்ஸ கிரிக்கெட் போட்டி




ஊவா வெல்ஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர் சமூகத்தால் நடத்தப்படும் வருடாந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இம்முறை பசறை மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் Young balls, deadly dragons, ruff riders , dazzling leopards, spicy girls, golden eagles ஆகிய அணிகள் பங்குபற்றின.

இப்போட்டியிலே deadly dragons, young balls ஆகிய இரு அணிகளும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. இப் போட்டியில் deadly dragon வெற்றி பெற்றது.

# விளையாட்டுச் செய்திகள்....

# தாய்லாந்து ஓபன் பட்மிண்டன்: சாய்னா நெலால் சம்பியன்






தாய்லாந்து ஓபன் கிராண்ட்ப்ரீ பட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாய்னா நெவால் சம்பியன் பட்டம் வென்றார். இந்தப் போட்டியில் அவர் முதன்முறையாக பட்டம் வென்றுள்ளார்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் நடைபெற்ற இந்தப்போட்டியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிச்சுற்றில் தரவரிசையில் 5ஆவது இடத்தில் உள்ள சாய்னா 19-21, 21-15, 21-10 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் ரட்சனோக் இந்தனனை வீழ்த்தினார். இந்த ஆட்டத்தின் முதல் செட்டை இழந்த சாய்னா பின்னர் சுதாரித்துக் கொண்டு அடுத்த இரு செட்களையும் கைப்பற்றிச் சம்பியன் ஆனார். இந்தச் சீசனில் சாய் னா வெல்லும் 2ஆவது பட்டம் இது. முன்னதாகக் கடந்த மார்ச்சில் ஸ்விஸ் ஓபனில் அவர் சம்பியன் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது. அடுத்த மாதம் ஒலிம்பிக் போட்டி தொடங்கவுள்ள நிலையில் தாய்லாந்து ஓபனில் வென்றிருப்பது சாய்னாவுக்கு பெரும் நம்பிக்கையைக் கொடுத்துள்ளது.

பொறுமையைக் கையாண்டேன். வெற்றி குறித்து சாய்னா கூறுகையில்,

பொறுமை மற்றும் அமைதியைக் கையாண்டதால் இந்தப் போட்டியில் வெற்றி கண்டேன். எவ்விதப் பதற்றமுமின்றி அமைதியாக விளையாடியது எனக்கு வெற்றியைக் கொடுத்துள்ளது. வெற்றியால் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளேன். இதற்கு முந்தைய போட்டிகளில் நெருக் குதலுக்கு மத்தியில் விளையாடும்போது எரிச்சலடைவேன். ஆனால் இந்தமுறை பின்னடைவைச் சந்தித்தபோதும் மிகவும் பொறுமையாக இருந்தேன்.

ஆட்டத்தின்போது தவறு செய்யவில்லை. சரியான ஷார்ட்களை ஆடினேன். அதனால் என்னுடைய ஆட்டம் சிறப்பாக அமைந்தது. இந்தப்போட்டியில் கடும் சவால்களைச் சந்தித்தேன். இந்தோனேசிய ஓபன் பட்மிண்டன் தொடங்கவுள்ள நிலையில் இப்போது வெற்றி கண்டிருப்பது மிகச்சிறந்தது. ஒலிம்பிக் போட்டிக்கான சிறந்த பயிற்சி ஆட்டமாக தாய்லாந்து ஓபன் அமைந்தது என்றார். ஒலிம்பிக்போட்டி தொடங்கவுள்ள நிலையில் தாய்லாந்து ஓபனில் வென்றது உங்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கையைத் தந்துள்ளதா என்று கேட்டதற்கு இது குறிப்பிடத்தகுந்த வெற்றி. நான் ஒருபோதும் நம்பிக்கை தளர்ந்ததில்லை.


தாய்லாந்து ஓபனில் விளையாடிய போது நிச்சயம் பட்டம் வெல்வேன் என்று நம்பினேன். இந்தப்போட்டியில் ஓரிரு ஆட்டங்களில் நான் பின்னடைவை சந்தித்தபோதிலும் அதிலிருந்து மீண்டு வந்தேன். ஒருபோதும் பதற்றமடையவில்லை என்றார்.

### மே.தீவுகள்–இங்கிலாந்து 3–வது டெஸ்ட்:

# மழையால் சமனிலையானது



மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்ற முதல் இரு டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்ற நிலையில் 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எட்ஜ்பஸ்டனில் நகரில் நடந்தது. பலத்த மழையால் முதல் இரு நாள்



ஆட்டங்களும் இரத்துச் செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து 3 ஆவது நாள் ஆட்டத்தில், முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி அன்றைய நாள் ஆட்ட நேர முடிபில் 8 விக்கெட் டுக்கு 280 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அவ் அணி சார்பாக விக்கெட் காப்பாளர் டினேஸ் ராம்டீன் 60 ஓட்டங்களுடனும், ரவி ராம்போல் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழ்க் காமல் களத்தில் இருந்தனர்.

#### சாதித்த பெஸ்ட்

இந்த நிலையில் 4 ஆவது நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது. ராம்போல் மேலதிகமாக ஓட்டங்கள் எதுவும் பெறாமல் அதே 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து இறுதி இலக்க வீரராக டினோ பெஸ்ட் களமிறங்கினார்.

ராம்டீன் - பெஸ்ட் ஜோடியை இங்கிலாந்து பந்துவீச்சாளர்களால் எளிதில் பிரிக்க முடியவில்லை. நிலை கொண்டு விளையாடிய இந்த இணையால் மேற்கிந்தியத் தீவுகள் அணி எதிர்பாராதவிதமாக 400 ஓட்டங்களைக் கடந்தது.

மேலும் டினோ பெஸ்ட் புதிய சாதனையையும் நிகழ்த்தினார். 2004 ஆம் ஆண்டு பங்களாதேஸுக்கு எதிராக இந்தியாவின் சகீர்கான் 75 ஓட்டங்கள் எடுத்ததே, 11-ம் இலக்க துடுப்பாட்ட வீரர் ஒருவர் டெஸ்ட் போட்டிகளில் எடுத்த அதிகபட்ச ஓட்டங்களாகும். அந்த ஓட்ட எண்ணிக்கையை கடந்து 30 வயதான பெஸ்ட் புதிய சாதனையைப் படைத்தார்.

5 ஓட்டங்களில் தனது முதலாவது சதம் பெறும் வாய்ப்பைத் தவறவிட்ட பெஸ்ட் 95 ஓட்டங்களில் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 426 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தது. ராம்டின் 107 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

#### தடுமாறிய இங்கிலாந்து

ராம்டின்- பெஸ்ட் ஜோடி 10-வது விக்கெட்டுக்காக 143 ஓட்டங்களை குவித்தது. கடைசி விக்கெட்டுக்காக மேற்கிந்தித்தீவு ஜோடியின் அதிகபட்ச ஓட்டம் இதுவாகும். இதற்கு முன்பு பாகிஸ்தானுக்கு எதிராக மேற்கிந்தியத் தீவுகளின் கார்ல் ஹூப்பர்- வோல்ஸ் ஜோடி 1993 ஆம் ஆண்டு 106 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இங்கிலாந்து தரப்பில் ஒனியன்ஸ் 4 விக்கெட்டுக்களும், பிரஸ்ணன், ஸ்ரீபன் பின் தலா 3 விக்கெட்டுக்களும் கைப்பற்றினர்.

பின்னர் தனது முதலாவது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 11 ஓவர்கள் முடிந்திருந்தபோது குக் (4 ஓட்டங்கள்) டிரோட் (17 ஓட்டங்கள்) ஆகியோரின் விக்கெட்டுகளை இழந்து 41 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று கடைசி நாள் ஆட்டம் தொடங்கியது.

இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்பிற்கு 221 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டம் மழையால் தடைப்பட்டது.

தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம்




முற்றிலுமாக தடைப்பட்டது.

இதனால் போட்டி சமனிலையாவதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி வென்றது.



# நடால் சாதனை வெற்றி




பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் சுற்றுத் தொடரின் ஆண்களுக்கான தனிநபர் பட்டத்தை ஸ்பெய்னின் ரபேல் நடால் கைப்பற்றியுள்ளார். உலகின் முதற்தர வீரரான நொவக் ஜொக்கோவிச்சைத் தோற்கடித்தே அவர் இந்தச் சம்பியன்பட்டத்தைக்கைப்பற்றியுள்ளார்.

மழை காரணமாக பாதிக்கப்பட்டு நேற்றைய நாள் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டதை அடுத்து போட்டி இன்று மீண்டும் தொடர்ந்தது. நான்காவது செட்டில் 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் காணப்பட்ட ரபேல் நடால், அந்த செட்டை 7-5 என்ற கணக்கில் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை 3-1 என்ற செட் வித்தியசாதத்தில் கைப்பற்றினார்.

போட்டியில் ரபேல் நடால் 6-4, 6-3, 2-6, 7-5 என்ற கணக்கில் வெற்றி பெற்றிருந்தார்.

இன்று ஆட்டம் ஆரம்பித்தது முதல் ஆக்ரோஷமாக ஆடிய ரபேல் நடால், பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் சுற்றுத் தொடரை 7 தடவைகள் கைப்பற்றிய முதல் வீரர் என்னும் சாதனையைப் படைத்தார். 6முறை பிரெஞ்சுப் பகிரங்க பட்டத்தை வென்ற பிஜோர்ன் போர்க் என்பவரது சாதனையையும் நடால் முறியடித்துள்ளார்.






களிமண்தரை ராஜா என அழைக்கப்படும் ரபேல் நடால், இறுதியாக நொவக் ஜொகோவிச்சைச் சந்தித்திருந்த 3 போட்டிகளில் தோல்வியடைந்திருந்த போதிலும் களி மண் தரையில் தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்தினார்.

மறுபுறத்தில் ரபேல் நடாலுடனான இறுதி 3 போட்டிகளில் வெற்றிபெற்ற தன்னம்பிக்கையுடன் களமிறங்கிய நொவக்ஜொகோவிச், 1996 ஆம் ஆண்டு ரொட் லவருக்குப் பின்னர் டென்னிஸ் உலகின் பிரதான நான்கு பட்டங்களையும் ஒரே நேரத்தில் கைவசம் வைத்திருந்தவர் என்ற சாதனையைப் படைக்கும் வாய்ப்பை தவறவிட்டார்.

இரண்டு வீரர்களும் ஆக்ரோஷமாக ஆடியதோடு அவ்வப்போது தர்க்கமான தருணங்களும் ஏற்பட்டிருந்தன. குறிப்பாக மத்தியஸ்தர்கள் மேற்கொண்ட சில தீர்ப்புகளுக்கு எதிராக ரபேல் நடால் மத்தியஸ்தரிடம் தர்க்கத்திலும் ஈடுபட்டிருந்தார்.

# துளித் துளியாய்....



★ பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றுள்ள ரஷ்யாவின் மரியா ஷரபோவாவுக்கு அந்நாட்டு அதிபர் விளாடிமிர் புடின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் 4 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் கைப்பற்றியதுடன் நம்பர் 1 அந்தஸ்தையும் பெற்றுள்ள நீங்கள் இனியும் பல்வேறு வெற்றிகளைக் குவிக்க வேண்டும். அபார திறமை, செயல்திறன், அசைக்க முடியாத உறுதி இவற்றால் வெற்றி உங்கள் வசப்பட்டுள்ளது. வாழ்த்துக்கள் என்று தெரிவித்துள்ளார்.

★ இந்தியக் கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் ஹோலி நேற்று முன்தினம் அளித்த போட்டி ஒன்றில், துணைத்தலைவராக பொறுப்பேற்ற பிறகு என்னை இரசிகர்கள் அதிகம் கவனிக்கின்றார்கள். மைதானத்தில் சில சமயங்களில் அதிகம் கோபத்துடன் நடந்து கொள்வேன். அப்படிப்பட்டவற்றைக் குறைத்துக் கொள்ளுமாறு அணித் தலைவர் தோனி அறிவுறுத்தியுள்ளார்.

எவ்வளவு கோபம் இருந்தாலும் எல்லையை மீறக்கூடாது என்றுள்ளார். அதனால் விரைவில் எனது நடவடிக்கைகளை மாற்றிக் கொள்வேன். கோபத்தை கட்டுப்படுத்தினால் மட்டுமே நல்ல கிரிக்கெட் வீரராக முடியும் என்று தோனி சொன்னதை மதித்து இனி நடப்பேன் என்று கூறியுள்ளார்.

## மீள்குடியேற அனு...

இந்தப் பகுதியில் மக்கள் குடியிருப்புக் களை அதியுயர் பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தி இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு குற்றம் சுமத்தி வந்துள்ளது.

எனினும் இந்தப் பகுதிகளில் கண்ணி வெடிகள் இன்னும் அகற்றப்படாத காரணத்தினாலேயே இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்ய வில்லை என அரசாங்கம் கூறி வருகின்றது.

எனினும் இதனை நிராகரித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன், திருமுறிகண்டி கிராமம் உட்பட சுமார் 4000 ஏக்கர் நிலப்பரப்பில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் இங்கு சிங்களக் குடியேற்றம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை கடந்த 3 வருடங்களாக மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனால் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களில் 50க்கு மேற்பட்ட குடும்பங்கள் மனிக்பாம் இடைத் தங்கல் முகாமிலும், ஏனையோர் உறவினர் நண்பர்களது வீடுகளிலும் கஷ்டத்திற்கு மத்தியிலும் வாழ்ந்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

திருமுறிகண்டி பகுதியிலுள்ள சுடலையும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருப்பதாகவும், இங்கு இறந்தவர்களை எரிப்பதற்குக் கூட இந்தப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

திருமுறிகண்டி காணிகளை மீளப்பெறுவதற்காகப் பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும் பலனேதும் கிட்டாத நிலையிலேயே அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிலர் நியாயம் கேட்டு நீதிமன்றத்தை நாடியிருப்பதாகவும், ஆயினும் அந்த வழக்கைத் தொடர வேண்டாம் எனக் கூறி அவர்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் சிறிதரன் கூறுகிறார். (எ-11)

## அமெரிக்காவின் கொள்...

சாட்சியமளித்தார்.

வடக்கில் இராணுவ குறைப்பு, மாகாண சபை தேர்தல், மனித உரிமை பிரச்சினைகளை கையாள்வதற்கான பொறிமுறை உட்பட இலங்கை பற்றிய அமெரிக்காவின் நீண்ட கால கொள்கையை அவருடைய கூற்று மீள வலியுறுத்தியது.

கடந்த மாதம் வாஷிங்டனில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனை சந்தித்தபோது பேசப்பட்ட விடயங்களையும் அவரது கூற்று பிரதிப்பலிக்கின்றது.

அத்துடன் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான விரிவான கூட்டு செயற்பாட்டுக்கான அவசியத்தையும் தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார் என்றுள்ளது. (எ-11)

## முள்ளிவாய்க்கா...

அனைத்து இடங்களையும் தோண்டிப் பார்த்து அங்கே புதையுண்டு கிடைக்கும் பொருட்களை நாளுக்குநாள் தோண்டி எடுத்து வருகின்றனர். இவற்றில் பெரும் பகுதியை இராணுவத்தினர், விற்பனை செய்தும் வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சில முக்கிய இடங்களுக்குத் தமிழ் மக்கள் செல்வதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வெள்ளாமுள்ளிவாய்க்கால் பகுதியில் விடுதலைப்புலிகளால் அரிசி ஏற்றி வரப்பட்டபோது கரையொதுங்கிய 100 மீற்றர் நீளமான கப்பல் ஒன்று காணப்படுகிறது.

வன்னிப் பகுதிகளுக்கு வருகை தரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்கள் இதனைப் பார்ப்பதற்கு முண்டியடிப்பதைக் காண முடிகின்றது. ஆனால் தமிழ் மக்கள் இதனைப் பார்வையிடச் செல்வதை ஏனோ இராணுவத்தினர் அனுமதிப்பதில்லை.

முஸ்லிம் மக்கள்கூட இதனைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படும் நிலையில் தமிழ் மக்களை இராணுவத்தினர் தடுத்து நிறுத்துகின்றமை ஏன் என்று தெரியவில்லை. இதில் என்ன பாரபட்சம் என்று கேட்கின்றனர் தமிழ் மக்கள்.

மேலும் இந்தக் கப்பலைப் பார்வையிடச் செல்லும் பெரும்பான்மையின மக்கள் கப்பலின் அருகில் சென்று சிறிதளவு மணலையும் தம்முடன் எடுத்துச் செல்வதை அவதானிக்க முடிந்தது. இவ்வாறு மண் எடுக்கும் நிகழ்வுகள் புலிகளின் முக்கிய இடங்களில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மருத்துவருக்கு இடமாற்றம்

# சங்கம் கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவர் வைத்தியகலாநிதி கே.இராஜசேகரம் கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

உடனடியாகச் செயற்படும்படியாக வழங்கப்பட்ட இவ் இடமாற்றத்திற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்க யாழ்.கிளை கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

வைத்திய கலாநிதி இராஜசேகரத்தின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ள இச்சங்கத்தின் பொதுச்சபை இன்று கூடி மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி ஆராயவுள்ளது. (ந)

# தமிழீழ கால்பந்தாட்ட அணி நாடு திரும்பும்போது வரவேற்பு!

(லண்டன்)

வீவா உலகச் சுற்றுக்கிண்ணப் போட்டியில் தமிழீழம் சார்பாக பங்கேற்ற அணியினருக்கு அவர்கள் வாழும் நாடுகளில் பலத்த வரவேற்பு வழங்கப்பட்டது.

உலகளாவிய தமிழ் இளையோர் அவையின் ஏற்பாட்டில் சர்வதேச அரங்கில் இடம் பெறும் இந்தக் கால்பந்தாட்ட போட்டியான வீவா உலகச் சுற்றுக் கிண்ணப் போட்டியில் தமிழீழ அணியும் பங்குபற்றியிருந்தது.

குருதிஸ்தானில் (வட ஈராக்) இடம்பெற்ற இந்த உலகக் கிண்ணப் போட்டியில், தமிழீழ அணி சார்பாக கனடா, சுவிட்சர்லாந்து, பிரித்தானியாவில் வாழும் ஈழத் தமிழ் விளையாட்டு வீரர்கள் விளையாடி இருந்தனர்.

இவ்வாறு தமிழீழ அணிக்காக பிரித்தானியாவில் இருந்து சென்று விளையாடிய வீரர்கள் நேற்றுமுன்தினம் இரவு லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்திற்கு வந்தபோது அங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

பீபா உலகச் சுற்றுக்கிண்ணப் போட்டியில் அனுமதி பெறாத மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகாரம் பெறப்படாத தேசிய இன மக்களுக்காகவே வீவா சுற்றுக்கிண்ணப் போட்டி New Federation board ஆல் நடத்தப்பட்டது.

கால்பந்தாட்டத்தில் தங்கள் திறமைகளை தமிழீழ விளையாட்டு வீரர்கள் புலம்பெயர் நாடுகளில் வெளிப்படுத்தியுள்ளனர். வீவா உலகச் சுற்றுக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வதன் மூலம் இவர்களுக்கு தாங்கள் தமிழீழத்தைச் சேர்ந்த கால்பந்தாட்ட வீரர் எனும் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.(எ)

## ஐஸ்கிறீம்...

சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்முனை பாண்டிருப்பு பிரதேசத்திலுள்ள இரு வெவ்வேறு விழாக்களுக்காக ஒரே இடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஐஸ்கிறீமை உட்கொண்டதன் காரணமாகவே இவர்கள் மயக்க முற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-11)

## தேரின் வேண்டுகோளை...

பௌத்த நிலையம் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்கில் அழிக்கப்பட்ட பௌத்த விகாரைகள் மற்றும் வழிபாட்டு இடங்கள் தற்போது திருத்தி அமைக்கப்பட்டு வருவதாகவும் அவை அனைத்தும் விரைவில் பொதுமக்களின் வழிபாட்டுக்காக திறந்து விடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வடக்கிலும் கிழக்கிலும் பாழடைந்து போயிருந்த பெரும் எண்ணிக்கையான பௌத்த விகாரைகள் தற்போது அரசாங்கத்தினால் மீள திருப்பி அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வரலாற்று ஆலயங்களில் வழிபாடு நடத்துவதற்கு பொதுமக்கள் அங்கு விரைவில் செல்லமுடியும்.

வடக்கு, கிழக்கில் உள்ள வரலாற்றுக் கால தொல்பொருள் முக்கியத்துவம்மிக்க ஆலயங்களுக்கு, தொல்பொருள் திணைக்கள பணிப்பாளரின் கோரிக்கையை அடுத்து பாதுகாப்பு வழங்க, பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(எ-11)

## படுகாயமடைந்த...

வெடிவைப்பதற்காக கட்டி வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி வெடித்ததிலேயே குறித்த இளைஞன் படுகாயமடைந்திருந்தார்.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுக் காலை குறித்த இளைஞன் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரதீபன் (வயது 21) என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## சர்வதேச...

கடவுச்சீட்டுகள் குறித்த முழுவிபரங்களையும் நேற்று ஆரம்பித்து வைத்துள்ள தரவுதள இணைப்பின் ஊடாக இலங்கையும் பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இந்த நிகழ்வில் உரையாற்றிய பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, தற்போது ஆரம்பிக்கப்பட்ட இந்த முறைமைக்கு அமைய இலங்கையின் எல்லை பாதுகாப்பு தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ள முடியும் என தெரிவித்தார்.

தற்போது இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலா பயணிகள் மற்றும் முதலீட்டாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கையை மோசடி ஏற்படும் தளமாக மாறாதிருக்க அறிமுகம் செய்யப்பட்ட முறைமை பெரிதும் உதவும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (எ-11)

ACCA
ACCA
ACCA RMC
Association of Charted Certified Accountants
Jaffna

*We have organized a get together and conference after completing three years of ACCA education for Island, Vadamarachi and Jaffna coordinators, students and staff.*
*We have scheduled the conference on*
**17th June 2012 at Tilko Hotel at 5 p.m.**
*Please be good enough to participate in it without fail.*

e-mail: accareg@hotmail.com
TP : 0212224299
ACCA
Regional Office
Karaveddy,
Jaffna.
(C-245)

வேலைவாய்ப்பு
USA நிறுவனத்தின் வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள 30 கிளைகளுக்கு புதியவர்களுக்கு பயிற்சி அளித்து சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.
❖ தகைமை O/L, A/L
❖ சம்பளம் :- பயிற்சிக் காலம் :- 8000/- - 15000/- வரை
பயிற்சியின் பின் :- 35,000/-
ஆங்கில அனுபவம் தேவையில்லை
பரீட்சை நடைபெறும் இடம்: மட்டக்களப்பு
தொடர்புகளுக்கு :- 065-5689799, 077-3001962,
(8622)

வேலை வாய்ப்பு
யாழ் நகரில் இயங்கி வரும் Optimo
நிறுவனத்திற்கு மீண்டும் ஓர் தடவை ஆட்சேர்ப்பு
6 மாத கால பயிற்சிநெறியுடன் ஓர் உடனடியான நிரந்தர வேலையை பெற்றுத் தரக் கூடிய இந்நிறுவனத்துடன் நீங்களும் இணைந்து கொள்ள அழைக்க வேண்டிய
இலக்கம் 0772-151014
சம்பள எல்லை :- ★ பயிற்சிநெறியின் போது ரூ. 8,000/-
★ பயிற்சி முடிந்த பிற்பாடு ரூ.35,000/-
குறிப்பு :- ★ யாழ் நகரை அண்மிக்காதவர்களுக்கு தங்குமிடம் இலவசம். (இரு பாலாருக்கும்)
★ முந்தும் 25 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(8625)

அடகு நகைகளை மீட்பதற்கு ஓர் சந்தர்ப்பம்...!
♦ பவுணுக்கு அதிகபணம் தரும் வங்கி/ நிறுவனத்திற்கு மாற்றி உங்கள் நகைகளில் பெறுமதிக்கு கூடுதல் பணம் பெறப் போகிறீர்களா?
♦ குறைந்த வட்டி வீதம் தரும் வங்கி/ நிறுவனத்திற்கு உங்கள் நகைகளை மாற்றி வைக்கப் போகிறீர்களா?
♦ அடகு வைத்துள்ள உங்கள் நகைகளுக்கு ஏல விற்பனை கடிதம் வந்து விட்டதா? அவற்றை மீட்டு கூடுதல் பவுண் பெறுமதிக்கு விற்கப் போகிறீர்களா?
உங்களுக்கு உதவ நாம் தயாராயிருக்கின்றோம்
இன்றே அழையுங்கள் 0774050936
▶ சேவை கட்டணம் அறவிடப்படும்.
(C-249)

யாழ் நகரில் .....
உங்கள் அனைத்து வைத்திய சேவைகளுக்கும் .....
சாந்தம் வைத்தியசாலை
வெளிநோயாளர் பிரிவு (OPD)
உள்நோயாளர் பிரிவு (IPD)
ஆய்வுகூட வசதி (Laboratory)
சகல இரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனைகளும் உடனடியாகச் செய்து கொள்ளலாம்!
ECG, Scanning வசதி
Home Visit நடமாட முடியாத நோயாளர்களுக்கு வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிக்கப்படும்.
விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனை
நீரிழிவு நோயாளர்களுக்கான இலவச ஆலோசனை!
வெகுவிரைவில் சத்திர சிகிச்சை, மகப்பேற்று விடுதி ஆரம்பம்!
இல. 126, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
021 567 6577

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.